சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 1999, கார்த்திகை உ 4 செவ்வாய் (19-11-68) ஷஃபான் 27 புத்தகம் 23 இதழ் 6

மில்க்வைற்
நீல சோப், பார் சோப்
சீரான சலவைக்கேற்ற சிக்கனமான சோப்




# புதிய இந்தியத் தூதுவராக தமிழர் நியமிக்கப்படுவரா?

## அண்ணா, இந்திராவுக்கு மகஜர் தயாராகிறது!

இலங்கையில் புதிய இந்தியத் தூதுவராக தமிழர் ஒருவர் நியமிக்கப்படுவாரா? அல்லது இக்கோரிக்கையை இந்திய அரசு இம்முறையும் புறக்கணித்து விடுமா? இக்கேள்வி இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளித் தமிழர்கள் மத்தியில் பரவலாக கேட்கப்படுகிறது. இது சம்பந்தமாக பாரதப் பிரதமர் திருமதி இந்திராவுக்கும் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணாவுக்கும அவசர மகஜர் ஒன்றைச் சமர்ப்பிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிகிறது.

இலங்கையில் தற்போது இந்தியத் தூதராக கடமையாற்றி வரும் திரு. கண்டேவியா இம்மாதத்துடன் அப்பதவியிலிருந்து ஓய்வுபெற்று இந்தியா செல்லவிருக்கிறார். இதனைத் தொடர்ந்தே, திரு. கண்டேவியாவுக்குப் பின்னர் இந்திய தூதுவராக தமிழர் ஒருவரை இந்திய அரசாங்கம் நியமனம் செய்யுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

வெளிநாடுகளில், இலங்கையில்தான் இந்திய வம்சாவளியினரான தமிழர்கள் அதிக அளவில் வாழ்கிறார்கள்; எனவே இலங்கையில் இந்தியத் தூதராக தமிழர் ஒருவரே நியமிக்கப்பட வேண்டும் என இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரும் ஏனைய தமிழர்களும் நெடுங்காலமாகக் . கோரி வருவது தெரிந்ததே. இக்கோரிக்கை இந்திய அரசால் ஒவ்வொரு முறையும்

(9-ம் பக்கம் பார்க்க)


## யாரோ இவர் யாரோ?

அண்மையில் யாழ்ப்பாணத்திலிருந்து மாற்றப்பட்ட அரசாங்கஅதிபரை ''முருகனைப்போன்றவர்'' என்றும் ''வாழவைத்த தெய்வம்'' என்றும் பாராட்டுக் கூட்டங்களில் நரஸ்துதி செய்த அரசாங்க உத்தியோகத்தர் யார்?

கொழும்பிலிருந்து கிளிநொச்சிக்கு விஜயம் செய்திருந்த நில அளவைப் பகுதி உத்தியோகத்தரிடம் கிளிநொச்சியில் கள்ளத் தோணிகள் அதிகமாக இருக்கிறார்கள் என்று பொய்கூறிப் பந்தம் பிடித்த அரசாங்க உத்தியோகத்தர் யார்?

யாழ்ப்பாண மக்கள் அரசாங்க அதிபரை ஓர் அரசனாக மதிப்பவர்கள் என்று புழுகி, தன்னை ''நல்ல அடிமை'' என்று காட்டிக் கொள்ள முயன்ற அரசாங்க உத்தியோகத்தர் யார்?

மேற்கண்ட கேள்விகள் வடபகுதி மக்களிடையே கேட்கப்படுகின்றன!




## தமிழ் எம். பி. காடைத்தனம்: வீடுதேடி வந்தவர்மீது தாக்கு!

பண்டார வன்னியனின் வீரப்புகழ்பாடும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், தம்மைச் சந்திப்பதற்காக வீடு தேடிவந்த ஓர் அப்பாவித் தமிழர் மீது கோழைத்தனமாக தமது வீட்டில் வைத்தே தாக்குதல் நடத்தி காடைத்தனம் புரிந்த சம்பவமொன்று சென்ற வாரம் நடைபெற்றதாக தெரிய வருகிறது.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது;—

அண்மையில் குறித்த தமிழ் எம். பியை சந்திப்பதற்காக இருவர் எம். பி. யின் வீட்டுக்கு சென்றிருந்தனர். அவர்க்ளில் ஒருவர் முன்னாள் நகரசபை உறுப்பினர். இரண்டாமவரது பெயர் செல்வரத்தினம். செல்வரத்தினம் என்பவரது விஷயமாகவே முன்னாள் நகரசபை உறுப்பினர் அவரையும் அழைத்துக் கொண்டுஎம். பி. வீட்டுக்கு சென்றாராம். குறித்த எம். பியும், முன்னாள் நகரசபை உறுப்பினரும் எதிர் எதிரான அரசியற்கட்சிகளைச் சேர்ந்தவர்கள்.

தனது வீட்டுக்கு குறித்த முன்னாள் நகரசபை உறுப்பினர் வரவே, எம். பி; ஆத்திரமடைந்தாராம். முன்னாள் தகரசபைஉறுப்பினர் தமக்கு எதிரான அரசியற் கட்சியைச் சேர்ந்தவர் என்பதாலும், பல நாட்களுக்கு முன்பு நடைபெற்ற தமது கட்சிக் கூட்டத்தில் கேள்விகள் பலகேட்டுத் தொல்லையில் மாட்டியவர் என்பதாலும், எம். பி. ஆத்திரமடைந்தாராம். ஆனல் முன்னாள் நகராட்சிஉறுப்பினரைத் தாக்குவதற்கு எம். பி.க்கு திராணி வரவில்லையென்றும், அவருடன் சென்ற அப்பாவித் தமிழனை செல்வரத்தினம் என்பவர் மீது தனது கைவரிசையைக் காட்டத் தொடங்கியதாகவும் சொல்லப்படுகிறது.

''நீதான்டா எனது கட்சிக் கூட்டத்தைக் குளப்பினய்'' என்று கூறி அந்த அப்பாவி செல்வரத்தினத்தை மிருகத்தனமாகக் கைகளாலும், கால்களாலும் தாக்கி தனது வீரப்பிரதாபத்தைக் காட்டிவிட்டாராம் குறித்த தமிழ் எம். பி.

நான்கு பக்கமும் பலமான சுவர் கொண்ட தனது இல்லத்தின் அறையினுள் வைத்து ஓர் பலம் குறைந்த அப்பாவித் தமிழனைத் தாக்கிய எம். பி.யின் கோழைத்தனத்தைப் பற்றியே அவரது தொகுதியெங்கும் பேசப்படுகிறது.

## புதிய கட்சி ஆரம்பிப்பதை அனுமதியேன்

—திரு. அருமைநாதர்

தமிழரசுக் கட்சி தமிழ் மக்களின் சர்வாதிகாரக் கட்சி என்று சொல்வது உண்மையல்ல. தமிழரசுக் கட்சியின் கொள்கைகளை அமரர் வன்னியசிங்கம் மூலம், நன்ருக விளங்கிக்கொண்டோம். மக்களைக் கட்சிக் கொள்கையில் இருந்து ஏமாற்றமுடியாது. கட்சியில் குறைபாடு இருந்தால் நாங்கள் திருத்துவோம். அதற்காகப் புதுக் கட்சி தொடங்குவது பிழையான தொன்ருகும்.

திரு. நவரத்தினத்தை சர்வாதிகார முறையில் கட்சி வெளிவேற்றவில்லை. மீண்டும் திரு. நவரத்தினத்தைக் கட்சியில் சேர்த்துக்கொள்ளும்படி எமது மாவட்ட சபை வேண்டியுள்ளது. தமிழரசுக் கட்சியின் தீர்மானத்திற்கு மாருக நாம் எந்த முடிவையும் எடுக்க மாட்டோம்,

தமிழரக் கட்சியில் இருந்து நான் விடுதலையடைந்தாலும் கெடுதலையுண்டாக்கக்கூடிய எவருடனும் நான் கூட்டுச் சேர மாட்டேன்.

இவ்வாறு ஊர்காவற்றுறை மாவட்டக் கிளைத் தலைவரும் நாரந்தனை கிராமசபைத் தலைவருமான திரு. த. அருமைநாதர் புதிய கட்சி ஆரம்பிக்குமுகமாக யாழ் மலேயா கபே மேல் மாடியில் திரு. நவரதினத்தின் தலைமையில் 12-11-68ல் நடைபெற்ற கூட்டத்தில் திட்டவட்டமாக அறிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் செத்துச் சுடுகாடு போவதற்குள்

# தமிழைப்பற்றிய எனது கனவுகள் ஈடேறும்!

தமிழில் எழுத்துக்கள் அதிகம். அதனால் கற்பது கடுமையாகஇருக்கிறது. ஆங்கிலத்தில் 27 எழுத்துக்கள் தான் என்று கூறும் அதிமேதாவிகள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

தமிழிலும் முப்பது எழுத்துக்கள் தான். ''அ'கர முதல் 'ன'கர இறுவாய்—முப்பஃதென்ப'' என்று தொல்காப்பியர் கூறுவர். மற்ற எழுத்துக்கள் எல்லாம் சார்பெழுத்துக்கள். முப்பது எழுத்தை வைத்துக் கொண்டே தமிழை நடத்தலாம்,

ஆனால் மற்ற மொழிக்காரர்கள் எளிதாக இருந்தால் தான் தமிழைப் படித்து தரணியெங்கும் தமிழ் மணம் வீசச் செய்வார்கள் என்று பேராசை பிடித்த மொழிப் பற்றுடைய புலவர்கள் தமிழில் சார்பெழுத்தைத் தோற்றுவித்தனர்.

ஆங்கிலத்தில் குறிலும் நெடிலும் ஒன்றுதான். நெடுநல்வாடை என்பதை ஆங்கிலத்தில் எழுதினால் 'நெடுநாள்வடை' என்று தான் வாசிப்பார்கள். தமிழைப் போல் ஆங்கிலத்தில் குறில் நெடில் இல்லாத குற்றம் தான் இது.

வடமொழியில் கூட ஒலி வேறுபாடு காட்ட வரிவேறுபாடு காட்டுவார்கள். ஜ. ஷ. ஸ. க்ஷ என்ற எழுத்துக்களில் ஒவ்வோன்றிற்கும் ஒவ்வொரு ஒலி வேறுபாடு உண்டு. ஆனால் தமிழில் அன்பு என்ற சொல்லை எடுத்துக்கொண்டால் அதிலுள்ள 'பு' ஒரு விதமான மெல்லிய ஒலியாகவும் அப்பு என்ற சொல்லில் வரும் 'பு' கரம் வன்மையாக வேறு வித ஒலியாகவும் வருவதைக் காணலாம்.

### தமிழ் உலகுக்காக

தமிழில் ஒரு எழுத்தே வெவ்வேறு ஒலிகளில் வரும். இந்தச் சிறப்பு வேறு எந்த மொழிக்கும் இல்லை. உயிரோடு கலந்தது தமிழ் என்பதற்கு இது எடுத்துக்காட்டு தமிழ் தமிழனுக்காக மட்டுமல்ல உலகுக்காக என்பதற்காகத்தான் சார்பெழுத்துக்கள் படைக்கட்பட்டன.

இந்த நாட்டுக்கு வந்த அயல் நாட்டுக்காரர்களெல்லாம் எத்தனையோ மதங்களைக் கொண்டுவந்தார்கள் எத்தனையோ தத்துவங்களைக் கொண்டுவந்தார்கள். பௌத்தர்கள் தங்கள் கருத்துக்களைக் கூற மணிமேகலையைப் படைத்தார்கள். முஸ்லிம்கள் சீருப்புராணத்தைப் படைத்தார்கள். கிறீத்தவர்கள் தேம்பாவணியைப் படைத்தார்கள். ஆனால் அனைத்திலும் உள்ள கருத்துக்களைத் தள்ள வேண்டியதைத் தள்ளிக் கொள்ள வேண்டியதைக் கொண்டான் தமிழன்.

### வழி நூல்

''பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல''என்பது இலக்கணத்திற்காக மட்டுமல்ல இலக்கியத்திற்காகவுந்தான் ''முன்னோர் கூறிய முடி பொருங் கொத்து—பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி—அழியா மரபினது வழி நூலாகும்'' என்று நன்னூல் வழி நூல் பற்றிக் கூறுகிறது.

'பிற்காலத்தில் புதிய புதிய கருத்துக்களை வேற்று மொழிகளிலிருந்து எடுக்க வேண்டியதிருக்கும். எடுத்தால்தான் வாழவேண்டியதிருக்கும்'. என்பதை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் முன்னோர்கள் உணர்ந்திருந்த காரணத்தால் தான் 'வழிநூல்' என்று இலக்கணம் வகுத்து ஒரு மொழியிலிருந்து தமது மொழிக்கு மொழி மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் பற்றி எழுதினார்கள்.

### மணிமேகலை கூறுகிறது

மணிமேகலையில் ஒரு சான்று கூறுகிறேன். சாதுவன் என்ற வணிகன் கடல் கடந்து கலமேறி வாணிபம் போகிறான். போகும் வழியில் கப்பல் உடைந்து விட்டது. கடலில் நீந்திக்கரையேறி நாகநாடுஅடைகிறான். அங்கே உள்ள நாகர்கள் மனிதர்களைச் சாப்பிடுபவர்கள். தங்கள் இனத்தைத் தவிர தங்கள் மொழி பேசுபவரைத் தவிர மற்றவர்களையெல்லாம் அடித்துக் கொன்று சாப்பிடுபவர்கள்.

அப்படிப்பட்ட அவர்கள் சாதுவனைக் கொன்று தின்னப் போகும்போது எங்கே கூட்டிப் போகிறீர்கள் என்று நாகர்கள் பேசும் மொழியிலேயே கேட்டான். உடனே அவர்கள் தங்கள் மொழி பேசுகிறவன் என்பதால் அவனைக் கொல்லாது அவனுக்கு வேண்டிய அணிமணிகளெல்லாம் கொடுத்துத் தமிழகம் அனுப்பி வைத்தனர்—என்று சீத்தலைச் சாத்தனார் கூறுவார்.



சிலம்புச் செல்வர்
**ம. பொ. சிவஞானம்**

### நாகர்களின் மொழிப்பற்று!

கேவலம் நாகரிகமற்ற நாகர்கள் சிலம்பை அறியாத நாகர்கள்-திருக்குறளை அறியாத நாகர்கள்-தொல்காப்பியம் அறியாத நாகர்கள் சுருங்கச் சொன்னால் பேசி அறிவதன்றி எழுதியறியாத மொழியுடைய நாகர்கள் காட்டு மிராண்டித்தனமாக வாழ்ந்த நாகர்கள் தங்கள் மொழியைப் பேசினான் என்பதற்காக அவன் மீது பற்றுவைத்து கொல்லாமல் விட்டார்களென்றால் முதற் சங்கம் கண்டு-இடைச் சங்கம் கண்டு- கடைச் சங்கம் கண்டு-திருக்குறள் கண்டு சிலப்பதிகாரம் கண்டு—மணிமேகலை கண்டு—நன்னூல் கண்டு உலகாண்ட தமிழர்களாகிய நமக்கு எந்தஅளவு தமிழின் மீது உணர்வு இருக்க வேண்டும்? அப்படிப்பட்ட நமக்கு தமிழ் உணர்வு உச்சக் கட்டத்திற்குச் சென்று அதற்காகப் போராடுவதில் என்ன தவறு?

நீண்ட நெடுங்காலமாக நாம் அடிமைப் பட்டுக் கிடந்து விட்டோம். நம் மொழி அடிமைப்பட்டுக் கிடந்தது. மராட்டியர்களுக்கு அடிமைப்பட்டது. இராட்டிர கூட மன்னர்களுக்கு அடிமைப்பட்டது சாளுக்கியர்களுக்கு அடிமைப் பட்டது—விஜயநகரப் பேரரசுக்கு அடிமைப்பட்டது. ஆக ஆங்கிலேயர்களுக்குத் தான் அடிமைப் பட்டோம் என்றில்லாமல் இப்படிப் பலருக்கும் பல காலத்தில் அடிமைப் பட்டது ஆனால் இனவழியை அடிமைப் படுத்தினாலும் மொழி வழியை அடிமைப் படுத்த முடியவில்லை.

தென்னை மரத்தின் நாற்றுக்காய் ஒன்றின் அழிவிலிருந்துதான் தென்னை மரச் சோலைகள் செழித்து வளர்கின்றன- அதுபோல தமிழ்ச் சாதிவாழ நான் அழிந்தாலும் கவலையில்லை யென்று தான் நாற்பத்திரண்டு ஆண்டுக்காலம் தமிழுக்காக என்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறேன்.

பிறர் நம்மை அடிமைப் படுத்துகிறார்கள் என்று எண்ணுவது தவறு. ருஷ்ய நாட்டில் வாழ்ந்த டால்ஸ்டாய் 'இந்தியா ஏன் அடிமைப் பட்டது' என்ற நூலில் பிறர் உங்களை அடிமைப் படுத்துகிறார்கள் என்று எண்ணாதீர்கள், நீங்கள் அடிமைபட்டுக் கிடக்கிறீர்கள் என்பதை எண்ணுங்கள் என்று குறிப்பிடுகிறார்.

நான் தெரிந்தோ தெரியாமலோ ஆங்கிலத்திற்கு விரோதியாகி விட்டேன். தமிழ் மொழிக்கு விரோதியாக இருப்பதைவிட தமிழனாக இருந்துகொண்டு அதுவும் தமிழ் நாட்டிலே வாழ்ந்துகொண்டு எனக்குத் தமிழ் வராது என்று சொல்லுகின்ற தமிழ்த் துரோகிகளைவிட நான் ஒன்றும் ஆங்கிலத்திற்கு விரோதியல்ல.

### தமிழால் முடியாது என்பவர்கள்...

தமிழ் வாழ்க என்றுதான் சொல்லுகிறோமே தவிர தமிழ் முழு உரிமையைத் இன்னும் பெறவில்லை. இன்னும் 24மணி நேரத்தில் தமிழக அரசுத் துறைகளிலெல்லாம் தமிழ் என்ற நிலையைக் கொண்டுவந்து விடமுடியும். கல்லூரியில் எல்லாப் பாடங்களின் பயிற்று மொழியும் தமிழில் கொண்டுவர முடியும்.

ஆனால் காலம் கனியவில்லை. மாநில அரசுக்கு அதிக அதிகாரம் இல்லை. தமிழகத்தின் கல்வித்துறைப் பொறுப்பில் உண்மைத் தமிழ்ப் பற்றுள்ளவர்கள் இருக்கவேண்டும். தமிழால் முடியாது என்று சொல்பவர்கள் அந்தத் துறையின் பொறுப்பை வகிக்கக் கூடாது.

நான் பதவிக்காகத் தி. மு. க. வுடன் இருக்கவில்லை. தமிழுக்காக இருக்கிறேன். தமிழ் பற்றிய என் கனவு நான் செத்துச் சுடுகாடு போவதற்குள் நிறைவேறும் என்று கருதுகிறேன்.

எங்கும் தமிழ்— எதிலும் தமிழ் என்ற நிலையில் தமிழகம் முழுவதும் தமிழ் ஆதிக்கம் செலுத்துகிறது என்ற சொல்லை என்று கேட்கிறேனோ அன்றுதான் நான் பிறந்த பயனடைவேன். அப்படிப்பட்ட வார்த்தையைக் கேட்டுச் செத்தால்தான் என் ஆத்மா சாந்தியடையும்.

அண்ணா அதைச் செய்து முடிப்பார் என்று நம்பித்தான்; வயிற்றுவலி இருந்தாலும் தமிழுணர்வில் இன்னும வாழ்ந்து கொண்டிருக்கிறேன். அந்த நாள் விரைவில் வரும் என்று எதிர்பார்க்கிறேன்.

# தமிழ்மலர் -9ம் வகுப்பு

(முற்றொடர்)

ஓர் ஆய்வுரை

ஆசிரியர் க. இராமலிங்கம்

இந்நூலின் முதற்பகுதி கட்டுரையியலாகும். முதலிற் 'பந்தி அமைத்தல்' காட்சி தருகின்றது.

'ஒரு கருத்தை விரித்து விளக்கும் பல வாக்கியங்களின் தொகுப்புப் பந்தியெனப்படும். பல கருத்துக்களை விரிக்கும் பந்திகளின் தொகுப்பு, கட்டுரையாகும். கடிதம், கட்டுரை, அறிக்கை முதலியனவெல்லாம் பந்தியுடையனவாயிருக்கும். கருத்துக்களையும் பந்தியாகப் பிரித்து விவரிப்பது விடயங்களை அறிவுறுத்துவதற்கு ஏற்ற நல்ல முறையாகும். இதனாற், சொல்லப் புகுந்த கருத்துக்கள் தொடர்பாகவும், விளக்கமாகவும், எளிதாகவும் வாசிப்போர் மனதிற் பதியும்.

இது 'பந்தி அமைத்தலின்' முதறபந்தி. 'தொகுப்புப் பந்தி' என்று புணர்த்தி எழுதிய நூல் ஆசிரியர், 'தொகுப்பு கட்டுரை' எனப் பிரித்துக் காற்புள்ளியைப் புகுத்தித் தொடக்கத்திலேயே மயக்கத்துக்கு வித்திடுகின்றார்.'

'கருத்துக்களையும்' எனுஞ் சொல்லிலுள்ள உம்மை குறிப்பதுயாது? 'கருத்துக்களையும்' பந்தியாகப் பிரித்து விவரிப்பது போல வேறெவற்றையும் பந்தியாகப் பிரித்து விவரிக்கலாம்?

'இதனாற், சொல்லப்படும்' எனுந் தொடரில் விகாரப்பட்டுப் புணர்ந்த 'இதனாற்' என்பதன் பின்கால் புள்ளி இடப்பட்டதேன்? இப்பிழைகள் எட்டாம் வகுப்புமாணவர்களால் திருத்தப்படத் தக்கன,

### இரண்டாம் பந்தி

'பந்தி அமைக்கும்போது சில திட்டமான முறைகளைக் கடைப்பிடித்தல் நன்று. ஒருவாக்கியம் ஒருகருத்தை விளக்குவதுபோல, ஒருபந்தியும் ஒரு கருத்தை நிறுத்தும் முகமாக அதனோடு சம்பந்தப்பட்ட பொருட் கூறுகளை விரித்துரைக்கும். இவ்வாறு கருத்தை விரிக்கும்போது, அவற்றுள் ஓர் ஒருமைப் பாட்டைக் காணலாம்...'

இப்பந்தியிலுள்ள 'ஒரு கருத்தை நிறுத்தும் முகமாக' என்பது பொருத்தமற்ற கூற்று மட்டுமன்று; மாணவருக்கு மலைப்பையும் உண்டாக்கும் கூற்று 'இவ்வாறு கருத்தை விரிக்கும் போது' என்கிறார் நூலாசிரியர். கருத்தை விரித்தல் எவ்வாறு என்பது இப்பந்தியிற் கூறப்படவில்லை. 'கருத்தை நிறுத்தல் என்பது தான் புகுத்தப்பட்டுள்ளதேயன்றிக் கருத்தை விரிக்குமாறு விளக்கப்படவில்லை,

அவற்றுள் எனும் பன்மைச் சொல் எதனைக் குறிக்கின்றது? பந்தி ற்றிக் கூறத் தொடங்கிய நூலாசிரியர் கருத்துக்குத் தாவி விட்டார்.

இப்பந்தியிலுள்ள இந்த இரண்டாவதுவாக்கியத்தை 'இவ்வாறு பொருட்கூறுகளை விரிக்கும் போது அவற்றுள் ஓர் ஒருமைப் பாட்டைக் காணலாம்'' எனத் திருத்தினான் ஒன்பதாம் வகுப்பு மாணவன் ஒருவன்.

### மூன்றும் பந்தி

'கருத்துக்களைத் தருக்க முறைப்படி ஒழுங்குபட எழுதுதல் வேண்டும்; பந்தியில் இந்த ஒழுங்கைப் பின்பற்றினால், அது ஏனைய பந்திகளுக்குரியஒழுங்கையுண்டாக்கும். பந்தியமைப்பதாற் கட்டுரையாளனின் சிந்தனை யும் ஒழுங்கிற் செல்லப் பழகிக் கொள்ளும்''

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழினி
நல்லூர்.

கே: சிறிமா — சாத்திரி ஒப்பந்தம் மலைநாட்டுத் தமிழருக்கு பாதகமானது என்று பிரசாரம் செய்யும் ஜீ. ஜீ. அச் சட்டத்தை எதிர்த்தாரா?

ப: எதிர்த்தாரா? ஆதரித்துப்பேசி, ஆதரித்து வாககும் அல்லவா அளித்தார்கள் ஜீ. ஜீ. யும், அவரது இரு சிவசிதம்பரங்களும்!

கே: தமிழ்ப்பல்கலைக்கழகத்தை ஜீ. ஜீ. ஏன் எதிர்க்கிறார்?

ப: தமிழரசுக்கட்சி அதை ஆதரிப்பதால்!

கே: திரு. பொன்னம்பலத்துக்கு போட்ட 65தங்கப்பவுண மாலைக்கு என்ன நடந்தது?

ப: அவரது இரும்புப் பெட்டிககுள் அது பத்திரமாக இருககலாம்!

கே: திரு. பொன்னம்பலம் தறசமயம் என்ன செய்கிறார்?

ப: அடுத்த பொதுத்தேர்தல் பிரசாரத்துக்கு என்ன என்ன பொயகளை சொல்லலாம் என்று லிஸ்ட் தயாரிக்கக்கூடும்!

கே: ஒற்றையாட்சியை எதிர்க்கும் சக்திகளுடன் ஒற்றையாட்சியை ஆதரிக்கின்ற ஜீ. ஜீ. ஒற்றுமைப் படவிருமபுவதேன?

ப: தேர்தலில் எம். பி. பதவிகளைக் காப்பாற்றலாம் என்ற ஓர் நப்பாசையினால் தான்!

கே: இடது சாரிகளுடன் ஜீ. ஜீ. ஐககிய முனனணி அமைப்பாரா?

ப: இடதுசாரிகள் இவரை ஒரு பொருட்டாக கருதினாலல்லவா அது நிறைவேறும?

ஃ

பி. எஸ். மார்க்கண்டு
களுதாவளை-4

கே: இன்பம்—துன்பம் இவை இரணடும என்ன?

ப: இரண்டுக்கும் நமது மனமே காரணம. ஒன்றைத துன்பம என்று நமது மனம கருதினால் அது துன்பம். அதையே இன்பம என்று கருதினால இன்பம்!

கே: திருமணம் — மறுமணம், பிறகு நடப்பது எது?

ப: பிணமணம்!

கே: வாழத் துடிக்கும் தம்பதிகள் வாழ்நது மலர்நது கசப்பாகிய பின் என்ன செய்வார்கள்?

ப: அடுத்தவர்களின் வாழ்வைப் பார்த்து பொறுமைப படுவார்கள்!

ஃ

கே. யெஸ். கே. பாலு,
உடப்பூர்.

கே: ஒரு காதலனிடமிருந்து தறகாலககாதலி எதனை முக்கியமாக எதிர் பார்ப்பாள்?

ப: காதலன் ஒழுங்காகச் சினிமாவுக்கு அழைத்துச் செல்லக் கூடியவனாக இருக்க வேண்டுமென்று!

ஃ

கே. எஸ், சுநதரம்,
பத்துளு ஓயா.

கே: நான் ஒரு பெண்ணிடம் என் மனதைப் பறிகொடுத்து விட்டேன். அவள் என்னைக் கண்டவுடன் புன்சிரிப்புத் தவழ குனிந்தபடி செல்லுகிறாள். இதன் காரணம் என்ன?

ப: ஏதாவது ஒரு சினிமாப் படத்தில ஜெயலலிதாவோ சரோஜாதேவியோ அப்படி நடித்ததைப் பார்த்திருப்பாள். அதை அப்படியே உம்மிடம் நடித்துக் காட்டுகிறாள் போலும்!

ஃ

ஆர். ஆனந்தசுப்பிரமணியம்,
நீர்கொழும்பு.

கே: பிச்சைக்காரனாவதும் கோடீஸ்வரனாவதும் தலையெழுத்தா?

ப: அல்ல—சிலர் ஏற்படுத்திவிட்ட சமுதாய அமைப்பால் வந்த வினை இது!

கே: மனிதனாகப் பிறந்தும் மனிதனாக வாழச்சிலர் தவறிவிடுவது ஏன்?

ப: மனிதனாக வாழ அந்தச் சிலரை சமுதாயம அனுமதிக்காததனால!

ஃ

ஆ. இராஸ்,
சதாமலைன்ட் எல்ல.

கே: என்னைச் சிறுவயதிலிருந்து என் அண்ணா ஆதரித்தார். இப்பொழுது திருமணம் செயத பிறகு என்னை ஆதரிக்கவில்லை ஏன?

ப: உங்களை உலகம் தெரிந்த மனிதராக ஆக்குவதற்காக!

ஃ

ஆ. சுந்தரராஜ்,
சதர்மலண்ட எல்ல.

கே: நித்தியத்தைக் கைவிட்டு அநித்தியத்தைக் கையாளுபவர்களைப பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: அப்படிப்பட்டவர்கள் தங்களைத தாங்களே அழித்துக் கொள்ளுபவர்கள் என்று கருதுகிறேன்!

ஃ

வே. சீராளன்,
கைதடி.

கே: பொன்னம்பலம் தமிழ் மக்களுக்குச் செய்த மாபெரும் செயல யாது?

ப: ? ? ? ?

ஃ

சு. த. சிவராஜா,
கைதடி வடக்கு.

கே: தமிழ் மக்களுக்கு மிகவும் பயன்படக் கூடிய பல்கலைக் கழகத்தை இல்லாது தடுக்க முயற்சி செய்ய முற்படும் தமிழ் காங்கிரசின ஆயுட்காலத் தலைவர் அடுத்த பொதுத் தேர்தலில தமிழ் மக்களிடம்யாது கூறி வாக்குக்கேட்பர்?

ப: ஒற்றையாட்சி, வட்ட மேசை, ஐக்கிய முன்னணி... இத்தியாதி இருக்கின்றனவே;

ஃ

க. சி. ராஜா,
நெடுங்கேணி.

கே: எம், ஜி. ஆர். சிவாஜி என்று பாகுபாடு காட்டி நடக்கும் கயவர்களைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

ப: பிழைக்கத் தெரிந்தவர்கள் என்று சொல்கிறேன்!

ஃ

எஸ். செல்வம்,
கைதடி.

கே: தீண்டாமையை சில பாடசாலைகளிலும் பேணுகிறார்களே, அவர்களுக்குக கொடுக்க வேண்டிய தண்டனை என்ன?

ப: அப்படிப்பட்டவர்களை தீண்டாமல் விடுவதுதான்!

ஃ

க. ஜெயானந்தன்,
மாதகல் வடக்கு.

கே: கவிஞனுக்கும் விஞ்ஞானிக்கும் உள்ள வேற்றுமையாது?

ப: கவிஞன் சிந்தனை கட்டுப்பாடில்லாமல் விரியும். விஞ்ஞானியின் சிந்தனை ஓர் கட்டுக் கோப்புள் மட்டுமே நிற்கும்.

கே: தற்காலப் பெண் மணிகளைத் திருவள்ளுவர் கண்டால்...?

ப: வாசுகி அம்மையாரையும் மினிஸ்கேர்ட் போடும்படி நச்சரிப்பார்.

கே: கவலையை நோக்கி மனிதன் செல்கிறானா அல்லது மனிதனை நோக்கி கவலை செல்கிறதா?

ப: கவலையை நோக்கி மனிதன் தான் செல்கிறான்!

வே. குலேந்திரன்,
சங்கானை,

கே: பொன்னர் ஓர் இந்துவாக இருந்தும் ஆலயப் பிரவேச விஷயத்தில் மதில் மேல் பூனையாக இருப்பதேன்?

ப: அவர் ஓர் சந்தர்ப்பவாதியாக இருப்பதால்!

கே: வரப்போகும் பொதுத் தேர்தலில் சுந்தரலிங்கத்தார் தந்தை செல்வாவுடன் காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிட்டால் யாருக்கு சான்ஸ் இருக்கும்?

ப: தேவையற்ற கேள்வி—அரசியலில் ஈடுபடவோ தேர்தலில் போட்டியிடவோ போவதில்லையென சுந்தரா அறிவித்துவிட்டாரே!

ஃ

க. சிவராசா,
நெடுங்கேணி.

கே: கலோ மிஸ்டர் குயுக்தியாரே ஒருவர் காதலிப்பதைப் பார்த்து மற்றவரிடம் அதை வெளிப்படுத்துவோர் பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: காதலிக்கத் தெரியாதவர்கள் அவர்கள!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு-12




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## தமிழரசார் ஈட்டிய இரு வெற்றிகள்

கடந்த வாரம் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தியதன் விளைவாகத் தமிழ் பேசும் மக்களுக்குத் தமிழரசுக் கட்சி இரு வெற்றிகளை ஈட்டிக் கொடுத்திருக்கிறது. 55 வயது கடந்த தமிழ்த் தலைமையாசிரியர்களும். அதிபர்களும், சேவை நீடிப்புக்குத் சிங்களத் தகுதி கோரப்படமாட்டார்கள் என்றும் வடக்கு கிழக்கு மாகாண மக்களுக்கு வழங்கப்படும் அரசாங்கக் காசோலைகளில் சிங்களத்துடன் தமிழும் கண்டிப்பாக இடம் பெறவேண்டும் என்றும் இப் பேச்சுவார்த்தையின்போது அரசாங்கத்தின் சார்பில் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.

தமிழ்த் தலைமை ஆசிரியர்களிடம் சேவை நீடிப்புக்காக சிங்களத் தகுதி சோருவது படு துரோகத்தனமானது; பிர்போக்கானது; ஆங்கில ஆட்சியின் போது கூட இல்லாத கொடுமை; என்றெல்லாம் இப் பத்திரிகளில் முன்னர் சுட்டிக்காட்டியிருந்தோம். தமிழ்த் தலைமையாசிரியர்களிடம் சிங்களத் தகுதி சோருவது அரசாங்கம் அவர்களுக்கிழைக்கும் மாபெரும் அநீதியென்றும், சிங்களத்தை திணிக்கும் இப் முயற்சியை கைவிடவேண்டும் என்றும் ஆட்சியாளரைக் கேட்டிருந்தோம்.

இதேபோல தமிழ் பேசும் மக்களுக்கு தனிச் சிங்களத்தில் அரசாங்க காசோலைகள் வழங்கப்படுவதையும் வன்மையாகச் கண்டித்து, தமிழில் காசோலை வழங்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தியிருந்தோம்.

பிரதமர்—தமிழரசார் பேச்சுவார்த்தையின் பயனாக இவ்விரு கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டது கண்டு தமிழ் பேசும் மக்களுடன் சேர்ந்து நாமும் மகிழ்ச்சியடைகிறோம்,

இதே வேளையில் அரசாங்கம் அளித்துள்ள இவ் வாக்குறுதிகள் முறையாக அரசாங்க திணைக்களங்களினால் அமுல் நடத்தப்படுகிறதா என்பதையும் கண்காணிக்கவேண்டியது பிரதமர் கடமையாகும். ஏனெனில் அரசாங்கக் கொள்கை ஒன்றாக இருக்க அதற்கு நேர்முரணான கொள்கைகளை வேண்டுமென்றே அனுஷ்டிக்கும் பழக்கம் அரசாங்கத் திணைக்களங்களில் பெருகி வருகிறது.

தமிழ்ப்பல்கலைக்கழகம், சிங்களத்தில் தேர்ச்சியுறாத அரசாங்க ஊழியர் பிரச்சினை, தமிழ் மொழிச் சட்ட அமுல் ஆகியவை பற்றியும் தமிழரசார் பிரதமருடன் பேசியுள்ளனர். தமிழ் அரசாங்க ஊழியர் பிரச்சினையில் நீதியுடன் நடந்துகொள்வதாக பிரதமர் தமிழரசுத் தலைவர்களுக்கு உறுதியளித்துள்ளாராம்.

சிங்களத்தில் தேர்ச்சி பெறாத அரசாங்க ஊழியர்களின் விஷயத்தில் நீதி, மனிதத் தன்மை, தாராள மனப்பான்மை, நல்லெண்ணம், தேசிய ஒற்றுமை போன்ற பல்வேறு அம்சங்களையும் மனதில் கொண்டு பிரதமர் செயலாற்ற வேண்டும். கண்ணை மூடிக் கொண்டு தமிழ் ஊழியர்களைச் சிங்களப் பயிற்சி பெறவில்லை என்ற ஒரே காரணத்துக்காக கழுத்தைப் பிடித்து வெளியே தள்ள முயன்றால், அது நீதியுமாகாது; நேர்மையுமாகாது. தேசிய ஒற்றுமைக்கு வழி சமைப்பதுமாகாது.

சிங்களத் தேர்ச்சியில்லாத காரணத்துக்காக எந்த ஒரு ஊழியரும் வேலை நீக்கம் செய்யப்படக் கூடாது. இதுவரை வேலை நீக்க அறிவித்தல்கள் கொடுக்கப்பட்டிருந்தால் அவை வாபஸ் பெறப்பட வேண்டும். வேலை நீக்கம் போன்ற தீவிர நடவடிக்கைகளைக் கைவிட்டு, உத்தியோக மொழியைப் பயிலுவதற்கு மேலும் கால அவகாசமும், சம்பளத்துடன் விடுமுறையும் வழங்குவதற்கு அரசாங்கம் துணிவாகவும் விரைவாகவும் முன்வர வேண்டும்.

அதை விடுத்து தீவிர நடவடிக்கை எதையாவது அரசாங்கம் எடுத்தால் அதன் பிரதிபயனாகத் தேசிய ஒற்றுமை கெடும் என்று இப்பொழுதே எச்சரிக்க விரும்புகிறோம்.

## முயற்சி வெற்றிபெறட்டும்

தமிழரசுக்கட்சியிலிருந்து விலகிச் சென்றவர்களை மீண்டும் கட்சியில் சேர்ப்பதற்கு முயற்சி நடப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. இம்முயற்சியை நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். இம் முயற்சி வெற்றிபெற வேண்டுமென்றும் ஆசைப்படுகிறோம்.

தமிழரசுக் கட்சியை விட்டு வெளியேறிச் சென்றவர்கள், கட்சிக் கொள்கைகளிலோ, அல்லது இலட்சியங்களிலோ அவநம்பிக்கை ஏற்பட்டு அதனால் வெளியேறியவர்கள் அல்லர். 1965 மார்ச் மாதம் தேசிய அரசாங்கத்துடன் தமிழரசுக் கட்சி சேர்ந்தபின் கட்சி கடைப்பிடித்து வந்த சில நடைமுறைகளை விரும்பாததனாலும், வேறு சில சூழ்நிலைகளினாலுமே அவர்கள் பிரிந்து சென்றனர்.

இன்று தமிழரசுக்கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறிவிட்டது. தமிழரசுக் கோட்டையிலிருந்து சிலர் சென்றுவிட்டதனால், சுலபமாக அக்கோட்டையை முறியடித்து விடலாம் என அரசியல் எதிரிகள் மனக்கோட்டை கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். தினசரி ஏடுகளும் வழமைபோல தமிழரசுக்கட்சிக்கு எதிரான தமது பிரசாரத்தை நாள் தவறாது நடத்தி வருகின்றன.

# சிங்களத் தலைவர்களை ஆட்டும் சூத்திரதாரிகள் பிக்குகளே!

## இவ்வுண்மை மீண்டும் ஊர்ஜிதம்!

இந்நாட்டு அரசியலில் பௌத்த பிக்குகளின் சக்தி எவ்வளவு தூரம் ஆழமாகப் பதிந்திருக்கிறது என்பதையும் பௌத்தபிக்குகள் கிழித்தகோட்டைத்தாண்ட முடியாமல் இந்நாட்டுச் சிங்கள அரசியற்தலைவர்கள், பிக்குகளின் கைப்பொம்மையாக நடந்து வந்திருப்பதையும் கடந்த காலச் சம்பவங்கள் தெட்டத்தெளிவாக எடுத்துக் கூறுகின்றன.

இதற்குஆதாரமாக மூன்று சம்பவங்களைக் கூறலாம. 1957-ம் ஆண்டு காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை அமுல் நடத்தவிடாமல் தடுத்து நிறுத்தியது பௌத்த பிக்குகளின் சக்திதான். பிக்குகளின் எதிர்ப்புக்கு அஞ்சி அடிபணிந்தே ப—செ ஒப்பந்தத்தை திரு. பண்டாரநாயகா கைவிட்டார்.

இதே போலவே பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவும் தமிழரசாருடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி மாவட்டசபை மாசோதாவை கொண்டு வந்து நிறைவேற்ற முழு முயற்சியெடுத்தும் கூட பௌத்த பிக்குகளின் எதிர்ப்புக்கு அடிபணிந்து அம் முயற்சியை கைவிட வேண்டியதாயிற்று.

திருமலை கோணேசர் ஆலயப்பகுதியை புனித நகராக்க வேண்டுமென்ற இந்துக்களின் நீண்டகால அபிலாஷையை நிறைவேற்றுவதற்காக முன்னாள் அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் நியமித்த கமிட்டி, ஒரு பிக்குவின் எதிர்ப்பால் கலைக்கப்பட்டது.

பௌத்த பிக்குகள் கிழித்த கோட்டிலேயே இந் நாட்டு சிங்கள அரசியற் தலைவர்கள் செல்கிறார்கள் என்பதற்கு உதாரணமாக மற்றோர் சம்பவம் கடந்த வாரம் நடைபெற்றிருக்கிறது.

இந் நாட்டுக்கத்தோலிக்க மக்கள் தமது வழிபாட்டுக்காக ஞாயிற்றுக்கிழமையை விடுமுறை நாளாக்கும்படி கோரிவருகிறார்கள். வாரத்துக்கு 5நாள் வேலைத் திட்டம் கொண்டுவரப்படுமென்றும் அப்போது அரசாங்கம் ஞாயிற்றுக்கிழமையையும் விடுமுறைநாளாகப் பிரகடனப்படுத்தும்என்றும் தினசரி ஏடுகளில் செய்தி வெளியாகின.

சுதந்திரன் அரசியல் நிருபர்

யூ. என். பி. அரசாங்கத்தின் ஊதுகுழல்களான ஏரிக்கரை ஏடுகள் கூட இச்செய்தியை முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன.

இச் செய்தியைக் கண்டதும் பௌத்தபிக்கு ஒருவர் கொதித்தெழுந்து பிரதமருக்கு ஞாயிற்றுக்கிழமையை விடுமுறை தினமாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பகிரங்கமாக கடிதம் தீட்டினார்.

இதன் பயனாக மறுநாளே ஞாயிற்றுக்கிழமையை விடுமுறையாக்கும் திட்டமெதுவும் அரசாங்கத்துக்கு கிடையாது என்று மறுப்பு தெரிவித்து அறிக்கை விடுத்தார் பிரதமர்.

ஆகவே இவற்றிலிருந்து சிறுபான்மை மக்கள் ஒர் மகத்தான உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும். சிறுபான்மை மக்களின் சில உரிமைகளை வழங்குவதற்கு சிங்களத் தலைவர்கள் முன்வந்தாலும் கூட பௌத்த பிக்குகள் அதற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறார்கள் என்பதே அது. பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக சிங்களத் தலைவர்களும் பிக்குகள் சொற்படியே எப்பொழுதும் ஆடி வருவார்கள்.

நாட்டு அரசியலில் பௌத்தபிக்குகளின் தலையீடும் செல்வாக்கும் இருக்கும் இன்றைய அரசியல் அமைப்பின் கீழ் சிறுபான்மை மக்கள் ஒரு சிறு உரிமையைத்தானும் பெற்றுக்கொள்வது கடினமே;

தமிழ் பேசும் மக்கள் சுயநிர்ணய உரிமைக்காக மகத்தான போராட்டத்தை நடத்தி தங்கள் சொந்த அரசை அமைத்துக்கொள்வதே மீட்சிக்குள்ள ஒரே வழியாகும்.

ஆகவே இன்றைய அரசியற் சூழ்நிலையில் தமிழரசுக்கட்சி தன்னைப்பலம் பொருந்திய இயக்கமாக்கிக் கொள்ள வேண்டியது அவசரமும், அவசியமுமானது. தமிழரசுக் கோட்டையில் ஒரு கல் உடைந்து ஒட்டை விழுந்தாலும், அது இனத்துரோகிகளுக்கும்-எட்டப்பர்களும் வாய்ப்பாகிவிடுமென்ற மிகப்பெரியஉண்மையை தமிழரசுக் கட்சியினரும், கட்சியிலிருந்து வெளியேறிச் சென்றவர்களும் மறந்துவிடக்கூடாது.

அடுத்த பொதுத்தேர்தல் தமிழ்ப் பிரதேசத்தில் ஒற்றையாட்சி வேண்டுமா? வேண்டாமா? என்பதை வைத்தே நடைபெறப் போகிறது. எனவே ஒற்றையாட்சிக்கு எதிரான சக்திகளை சிதறிப் போகாமல் ஒன்றாகக் கட்டிக்காக்க வேண்டியது தமிழரசுக்கட்சித் தலைவர்களின் கடமையாகும்.

தமிழரசுக்கட்சித்தலைவர்களும், தமிழரசுக்கட்சியிலிருந்து வெளியேறியவர்களும், சிறு சிறு பூசல்களையும், ஒருவர் மீது மற்றவர் குற்றம் சுமத்துவதையும் கைவிட்டு முன்போல இறுக்கமாக இணைந்து தமிழரசுக்கட்சியைப் பலம் பொருந்திய கட்சியாக்கி, தமிழினத்தின் விடுதலைப்போரை நடாத்த வேண்டும் என்றுதான் இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

தமிழரசுக் கட்சி பட்டம் பதவி பெறும் நோக்குடனோ, சிலரது சுயநலத்தை நிறைவேற்றவோ ஏற்படுத்தப்பட்டதல்ல. தமிழ் பேசும் மக்களின் அரசியல் பொருளாதார சமூக விடுதலையை பெற்றுக் கொடுப்பதற்கென்றே உருவான கட்சி தமிழரசுக் கட்சி.

எனவே தமிழரசுக் கட்சியிலிருந்து விலகிச் சென்றவர்கள் மீண்டும் கட்சியில் சேரவேண்டும்; தமிழரசுக் கட்சியும் அவர்களை மீண்டும் அணைத்துக்கொள்ள [illegible] கூறவிரும்புகிறோம்;

## தெய்வம் விடை கொடுத்தது பூசாரி விடை கிடைக்கவில்லை

சிங்களச் சொற்கள் தமிழில் ஊடுருவுவதைத் தடுத்து நிறுத்த கிளிநொச்சி பா. உ. பண்டிதர் இரத்தினம் இடைவிடாது தொடர்ந்து எடுத்து வந்த நடவடிக்கை ஓரளவு வெற்றியளித்துள்ளது.

லக்சல என்பதற்கு இலங்கைசாலை யென்றும், ஜாதிக சம்பத என்பதற்கு நாட்டுச்செல்வம் என்றும்' சேசத்த என்பதற்கு வெண்கொற்றக்குடை என்றும் தமிழில் பெயரிடுவதற்கு உத்தியோக மொழித் திணைக்களம் அங்கீகாரம் அளித்திருக்கிறது.

இன்னும் பல சிங்களச் சொற்கள் அப்படியே தமிழில் வழங்கப்பட்டு வருகின்றன. 'சல்பில' அதற்கோர் உதாரணம். எல்லா சிங்களச் சொற்களுக்கும் ஏற்ற தமிழ் சொற்கள உபயோகத்தில் வரும வரை தமிழ் மக்களின் கிளர்ச்சி ஓயக்கூடாது.

மற்றோர் முக்கிய விஷயத்தையும் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம். எதிர் காலத்தில் இப்படிப்பட்ட சிங்களச் சொற்களை அரசாங்கம் புழக்கத்துக்கு கொண்டு வரும் நேரத்திலேயே அதற்கேற்ற தமிழ்ச் சொற்களையும் ஒரு சேர வெளியிட்டு விடவேண்டும். இல்லாவிட்டால் ஒவ்வொரு சொற்களுக்கும் போராட்டம் நடத்திக்கொண்டிருக்க வேண்டியேற்படும்.

மத்தியவங்கி, செய்தித் திரட்டு, இலங்கைசாலை, நாட்டுசசெல்வம் போன்ற தூய தமிழ்ச் சொற்களுக்காக எவவளவு தூரம் போராட வேண்டியிருந்தது என்பதை நினைக்கும்போது, தமிழுரிமையை இந்நாட்டில் நிலைநாட்டுவது இலேசான செயலல்ல என்பது துலாம்பரமாகத் தெரிகிறது.

தெய்வம் விடைகொடுத்தும் பூசாரி விடைக்கொடுக்காதது போல தமிழ்ச்சொற்களை அரசகரும மொழித் திணைக்களம் அங்கீகரித்தும், சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் அதை உபயோகிக்காது இழுத்தடித்து வருகின்றனவாம்; இதையிட்டு திரு. இரத்தினம் பிரதமருக்கு முறையிட்டுள்ளார்.

அரசகரும மொழித் திணைக்களம் ஏற்றுக் கொண்ட தூய தமிழ்ச் சொற்களை உடனடியாக அமுலுக்கு கொண்டு வரும்படி சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு பிரதமர் உத்தர விடுவார்என்று நம்புகிறோம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மன்னார்த் தொகுதி ஏழைக் கிராமவாசிகள் நாளிலும் பொழுதிலும் படும் வேதனை கேளீர்!

## தொலைபேசி, தபால் வசதியின்றி நோயாளிகள் இறக்கிறார்கள்!

## அழகக்கோன் குமுறல்!

"நானும் ஒருகிராமவாசி. தொலைபேசி வசதிகளையும் வீடுவீடாகச் சென்று தபால் விநியோகிக்கும் வசதியையும் நகரவாசிகளுக்கு மாத்திரமே கொடுக்கிறார்கள். கிராமவாசிகளுக்கோ இந்த வசதிகள் கிடையாது. விசேஷமாக எங்கள் பகுதியிலே அயிரம் மைல் விஸ்தீரணத்துக்குக் கிராமங்கள் இருக்கின்றன. அங்கு போக்குவரத்து வசதிகள் இல்லை. தொலைபேசி வசதிகளும் இல்லை.

இத்தகைய வசதியிருந்தால்தான் ஒரு நோயாளியையோ, கற்ப ஸ்திரியையோ பதினைந்து அல்லது பதினறுமைல்களுக்கப்பாலுள்ள பட்டணத்திலுள்ள ஆசுப்பத்திரிகளுக்குக் கொண்டு வந்துசேர்க்க முடியுமாயிருக்கும்; தொலைபேசி வசதி இருந்தால்தான் பட்டணத்துடன் தொடர்பு கொண்டு கார்களை வரவழைத்து ஒழுங்கு செய்யலாம்.

ஆனால், இவ்வித வசதிகள் இல்லாத காரணத்தால் காட்டு ஊர்களிலே வசிக்கும் எத்தனையோ மக்கள் மாண்டழிந்து போகின்றார்கள். இதை நினைக்க மிகவும் மனவருத்தமாக இருக்கின்றது. நகரவாசிகளுக்குச் செய்துகொடுக்கப்படும் இந்த வசதிகளை ஏன் கிராமவாசிகளுக்குச் செய்து கொடுக்கக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன்?

### வவுனிக்குள மக்கள் படும் தொல்லை

எங்கள் கிராமங்களிலோவென்றால் ஒருவித வசதியும் கிடையாது. குடியேற்றத் திட்டமான வவுனிக்குளம் என்ற ஊரிலே ஓர் உபதபால் நிலையம்இருக்கின்றது. அங்கு தபால் விநியோகம் செய்வதில்லை. பத்து நாள், பதினைந்து நாள், அல்லது இருபது நாட்களுக்குப் பின்னர், தபால் அட்டையிலே எழுதப்பட்டிருக்கும் முகவரியை உடையவர் அங்கு சென்று தமது கடிதத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்விதம் போய் எடுக்காவிட்டால் அந்தக் கடிதம் அங்கேயே கிடக்கும். தபால்விநியோகம் செய்யும் ஒரு பியோனை நியமித்தால் என்ன செலவு வந்துவிடப் போகின்றது? ஒரு வருடத்திலே, நான் நினைக்கின்றேன், 300 அல்லது 400 ரூபா வராது. அந்தக் காசை மிச்சம் பிடிக்க அவர்கள் இந்த அநியாயத்தைச் செய்கிறார்களென்று நான் மிகவும் விசனப்படுகின்றேன்.

வவுனிக்குளத்திலேயுள்ள உபதபால் கந்தோர், ஆரம்பிக்கப்பட்டு ஏறக்குறைய 6 அல்லது 7 வருடங்களாகின்றன.

அங்கே கிட்டத்தட்ட, 4,000, 5,000 குடியேற்ற மக்கள் சீவிக்கின்றார்கள். அந்தக் குடியேற்றத்திட்டத்திலே பல பிரதேசங்களிலேயுமிருந்து மக்கள் வந்து குடியேறியிருக்கிறார்கள். அவர்களுடைய சொந்தக்காரர்கள் யாராவது சுகமில்லாமலிருப்பதாக, அல்லது இறந்துவிட்டதாகத் தந்தி வந்தாலும் தபாலைப் போலத்தான் அதுவும் பாவிக்கப்படுகின்றது. சில வேலைகளில், அந்தத் தந்தியை வைத்திருந்து ஐந்து அல்லது ஆறுநாட்களுக்குப் பின்னர் தபால் மூலமாக அனுப்புகிறார்கள். இப்படியான நிலைமையிருக்கிறது அந்தக் கொலனியிலே.

### எதுவும் நடைபெறவில்லை

வவுனிக்குளம் இரண்டாம் யுனிற்றிலே நீர்ப்பாசனக் கந்தோருக்குத் தெலிபோன் வசதி இணைக்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து, வவுனிக்குளம் உபதபால் நிலையம், கால் மைல் தூரம்கூட இருக்காது. அங்கிருந்து ஒரு லூப்பொன்றைப் போட்டு அந்தத் தபால் கந்தோருக்குத் தொலைபேசி வசதியைச் செய்துகொடுங்கள் என்று நானும் சொல்லிக்கொண்டு தான் வருகின்றேன். செய்கிறோம், செய்கிறோம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் ஆறு, ஏழு வருடங்களாகியும் ஒன்றுமே நடைபெறவில்லை.

இது மாத்திரமல்ல: இது பற்றி மாவட்ட இணைப்புச் சபையிலே நான் பல தடவைகள் எடுத்துக் கூறியிருக்கின்றேன். ஒன்றும் நடப்பதாகத் தெரியவில்லை. நகரவாசிகளைக் கவனிப்பது போன்று கிராமவாசிகளையும் கவனித்து அவர்களை மேன்மைப் படுத்த வேண்டுமென்று ஏழை மக்களின் சார்பாக, நான் மிகவும் மன்றாட்டமாகக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நான் குறிப்பிடும் பிரதேசம் ஒரு காட்டுப் பிரதேசம். பிற்போக்கான பிரதேசம். அங்கேயிருக்கின்ற கிராமங்கள் யாவும் அங்கொன்று, இங்கொன்றாகச் சிதறிக் கிடக்கின்றன.



### பெரிய மடு

அங்கே பெரியமடு என்று இன்னுமொரு குடியேற்றத் திட்டம் இருக்கிறது. அக்குடியேற்றத் திட்டத்திலே ரோட்டு வசதிகள் கூடக் கிடையாது. அங்கு ரெலிபோன் வசதி சிறிதேனும் இல்லை. இதுபற்றியும் நான் மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டத்திலே ஒவ்வொரு முறையும் ஞாபகப்படுத்தினேன். இங்கேயும் எழுதினேன். ஒருமுடிவும் இல்லை.

அவர்கள் சொல்லுவதென்னவென்றால் ஒரு கட்டை போடுவதற்கு 30,000 ரூபா, 40,000 ரூபா செலவுசெய்யவேண்டுமாம். அந்தக் காசைப் பார்த்து, ஏழை மக்களைச் சாக விடுவதா என்றுதான் நான் உங்களைக் கேட்க விரும்புகின்றேன்.

இப்படி அரசாங்கம் கவனிக்காமல் விட்டால் மக்கள் மடிந்துவிடுவார்கள். கடைசியாக குடியேற்றத் திட்டத்திலுள்ளவர்கள் எல்லோருமே மடிந்து போக வேண்டிய நிலை வந்துவிடும்.

பெரியமடு எனது தொகுதியிலேயுள்ள ஒரு பெரிய கிராமம். அதற்கு எத்தகைய வசதியும் கிடையாது. வெள்ளாங் குளம்— குஞ்சுக் குளத்தில் ஒரு உபதபாற் கந்தோர் இருக்கிறது. குஞ்சுக் குள ரோட்டில் இருந்து எட்டு மைலுக்கு அப்பால் அது இருக்கிறது. இது மண் ரோடு ஆகையால் போவது மிகவும் கஷ்டம். மழை வந்தால் போகவே முடியாது. அங்கே வாழுகின்ற மக்களால் என்ன செய்ய முடியும்?


### கிராமவாசிகள் நிலை

தபால் போட்டால் போய்ச்சேர ஏழு, எட்டு நாட்கள் எடுக்கின்றது. வியாதி வந்தவர்கள், கர்ப்பிணிகள் அங்கே மிகவும் கஷ்டப்படுகிறார்கள். சில வேளைகளிலே உறிகட்டி நோயாளர்களை தோளிலே தூக்கிக் கொண்டு வருகிறார்கள். அதைப் பார்க்க மன வருத்தமாக இருக்கிறது. ஆகையால், அதனை அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நகரவாசிகளுக்கு மட்டுமல்ல, கிராமவாசிகளுக்கும் தேவையான வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டி

(6-ம் பக்கம் பார்க்க)

## கவிஞருக்கு பொன்னாடை



ஈழத்தின் தலை சிறந்த இளங்கவிஞர்களில் ஒருவரும் உணர்ச்சிக்கவிஞருமான, காசிஆனந்தன் அவர்களுக்கு இம் மாதம் 18ம் திகதி மட்டுநகர் தமிழ்க் கலாமன்றம் தனது 8வது ஆண்டுவிழாவில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கிறது.

இவ்வைபவம் 18ம் திகதி மாலை மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நடைபெறுகிறது.

கவிஞர் காசி. ஆனந்தன் அவர்களது "தமிழன் கனவு" கவிதை நூல் அண்மையில் ரகுநாதன் பதிப்பகத்தினரால் வெளியிடப்பட்டதுதெரிந்ததே. கவிஞர் காசி. ஆனந்தன் ஈழத்தின் புரட்சிக் கவிஞர் என்று பாராட்டப்படுபவர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கிழக்குமாகாணத்தில் கண்டெடுக்கப்பட்ட பௌத்தசின்னங்கள் புதைக்கப்பட்டுவிட்டன"

## சிங்கள இதழின் கண்டு பிடிப்பு!

"கிழக்கு மாகாணத்தில் கண்டெடுக்கப்பட்ட ஏராளமான, பௌத்த சின்னங்கள் மட்டக்களப்பு சமஷ்டி அரசாங்க அதிபரினால் புதைக்கப்பட்டு விட்டதாகக் கூறப்படுகிறது. தறபோது அரசாங்க அதிபா வேறு மாகாணத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார். அரசாங்கம்' இது விஷயமாக ஓர் விசாரணை நடத்தி மீண்டும் பௌத்த சின்னங்களை எடுக்க வேண்டும்"

—'சமசமாஜ' அதன் 2-ம் திகதிய இதழில் மேற்கண்ட செய்தியொன்றை முன் பக்கத்தில் வெளியிட்டுள்ளது.

'வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழர்களுக்கு சிங்களத்தில் காசோலைகள் வழங்குவது சம்பந்தமாக சமஷ்டிக் கட்சியினரின் பயமுறுத்தலால் பிரதமர் மகிழ்ச்சிகரமற்ற நிலையில் இருக்கிறார். இவ் விஷயத்தில் மீண்டும் ஒரு தடவை பிரதமர் சமஷ்டிவாதிகளின் கோரிக்கைக்கு மண்டியிட நேரிடும்''

—இவ்வாறு 'சிங்களே' அதன் 3-ம் திகதிய இதழில் வெளியிட்டுள்ள ஓர் செய்தி கூறுகிறது.

## முத்தமிழ்க் காவலரே! வருக வாழ்க!!

இவ் வாரம் ஈழத்துககு விஜயம் செய்திருக்கும் பேரறிஞர் முததமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ, விசுவநாதம் அவர்களை இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் சார்பில் வருக வருக என வரவேற்கிறோம்.

இத் திங்கள் 11ம் நாள தமது 70வது பிறநத நாள் விழா வைக கொண்டாடிய முத்தமிழ் காவலருககு இலங்கையிலும் விழா எடுத்துப் பாராட்ட வேண்டியது தமிழ் அன்பர்களின் தலையாய கடனாகும்.

தமிழ் மறையாம் திருக்குறள் கூறும் வாழ்க்கைநெறியை தம் வாழ்வில் அணுவும் பிசகாதுகடைப்பிடித்து வருபவர் அறிஞர் விசுவநாதம். திருக்குறளை அகழ்ந்து ஆராய்ந்து புதுப புதுத் தத்துவங்



களை யெல்லாம் வடித்துத் தநதவர்; தந்து கொண்டிருப்பவர்.

தமிழ் நாட்டில் இந்தி நுழையாமல் தடுத்து நிறுத்திய செயல் வீரர்களில் ஒருவர். தமிழகப் புலவர் குழுவைப் பின்னிருந்து இயக்கும் தொண்டர். இத்தனைக்கும் மேலாக 2வது உலகத் தமிழ்க்கருத்தரங்கு சென்னையில் சிறப்புடன் நடப்பதற்கு காலாக இருந்தவர்.

தமிழ்க்கடலாம் திரு. விசுவநாதம் ஈழத் தமிழினத்தின் வாழ்விலும் தாழ்விலும் பங்கேற்கும் ஓர் இரத்த தொடர்புடைய நண்பர். ஈழத் தமிழர்களின் அரசியல், சமூக, பொருளாதார நிலைமைகளை யெல்லாம் கசடறத் தெரிந்து வைத்திருப்பவர்.

70-வது பிறந்த நாளைக் கொண்டாடும பேரறிஞர் விசுவநாதம் இன்னும பல்லாண்டு பலலாண்டு வாழ்ந்து தமிழ் மக்களை வழிநடத்த வேண்டுமென வாழ்த்துகிறோம்!

இம் மாதம் 17-ம்திகதி ஈழம வந்துள்ள முத்தமிழ்க் காவலர், கண்டி அசோகா மாணவர் விடுதியின் 33-ம் ஆண்டு விழாவுக்கு தலைமைவகிக்கிறார். கொழும்புத்தமிழ்ச் சஙகமும் அன்னாருக்கு ஒரு பாராட்டுவிழா நடத்துகிறது. கதிர்காமம், பதுளை, நுவரெலியா, காலி,அட்டன் ஆகிய இடங்ளுக்கும விஜயம செய்ய விருககிறார்.

24-ந் திகதி தாயகம் திரும்புகிறார்.

## தங்குமடம்

"சுமைதாங்கி"

'சிஷ்யா'

'என்ன குருவே?'

'அந்தக் கிழவனும் பையனும் என்ன பேசிக்கொண்டு போகிறார்கள் சிஷ்யா?'

'நாவலர் சிலை அமைப்பு மாதிரிப் படத்தில் ஏதோ குற்றம் இருப்பதாக...'

'சிஷ்யா'

'என்னகுருவே?'

'அந்த மாதிரிப்படம் நம்மிடமும் உண்டல்லவா?'

'ஆமாம் குருவே'

'எடு பார்ப்போம்'

'இந்தாருங்கள் குருவே'

'குற்றமிருக்கிறது சிஷ்யா'

'ஏன் சிரிக்கிறீர்கள்; அப்படித்தான்கிழவனும் சொன்னார் குருவே'

'கிழவனைப்பற்றி மறந்து விடு சிஷ்யா'

'சரிகுருவே'

'ஏன் தெரியுமா?'

'தெரியவில்லைக்குருவே?'

'நாம்தான் இந்தக் குற்றத்தைக் கண்டுபிடித்தோம் என்று மக்களிடையே பிரச்சாரம் செய்கவேண்டும்'

'சரிகுருவே'

'இன்னொன்று'

'என்ன குருவே?'

'சிறுதுரும்பைத் தூணாக்கும்சித்து வித்தை உனக்குத் தெரியுமல்லவா?'

'நீங்கள் அதை எனக்குக் சரியாகக் கற்றுத்தரவில்லைக் குருவே'

'சிறு குற்றங்களைப் பெரிதாக' 'குளோசப்'பில்காட்டி பத்திரிகைகளிலே பக்கம் பக்கமாக எழுதித் தூற்றினாலும் போற்றினாலு நம்ப பெயரை விளம்பரப்படுத்திக்கொள்தல்.

'புரியுது குருவே'

'இந்த நாவலர் படத்தில் இன்னொரு பெரிய குற்றம் இருக்கிறது பார்த்தாயா?'

'கவனிக்க வில் லை. மன்னித்துவிடுங்கள் குருவே'

'பெருங்குற்றம், மாபெருங்குற்றம், சமய குரவர்களின் படம் வரையும் போது மிகவும் கவனமாக இருக்க வேண்டாமா? மார்பில் அணிய வேண்டிய திரிபுண்டர மார்பின் கீழும் வயிற்றின்மேலுமாக இருப்பதைப் பார், இது பெரிய மிகப் பெரிய மன்னிக்க முடியாத குற்றம்'

'ஆமாம் குருவே பெரிய குற்றம்தான்'

'பிடிசாபம்'

'வேண்டாம் குருவே மன்னித்து விடுங்கள்'

'மன்னிப்பதா? முடியாது வேண்டுமானால் சாபத்தைத் தவிர்த்துத் தண்டனை கொடுக்கலாம்... உடனே இதை வரைந்தவர் யாரென்பதையும் அவருக்கு குருவாகவிருந்து ஆலோசனை கூறியவர் யாரென்பதையும் கண்டுபிடித்து அவர்கள் தலையை...'

'ஐயையோ வேண்டாம் பிரபு'

சரி தலையை மொட்டையடித்து மயிர்களைக் கையில் கொடுத்து, எண்ணிக் கொண்டிருக்குமாறு பணிந்துவா''


'நல்ல தண்டனை குருவே நல்ல தண்டனை ... இதோ போகிறேன்''

## மன்னார்த்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யது அரசாங்கத்தின் கடமையாகும். ஒரு தபாற் கந்தோரை நிறுவுவதும், தொலைபேசி வசதிசெய்து கொடுப்பதும் அவ்வளவு கஷ்டம் இல்லை. ஒரு உப தபாற் கந்தோருக்கு தொலைபேசி வசதி அளிப்பதனால் 400, 500 ரூபாதான் செலவாகும். ஆகையால் அரசாங் சாஙகம் இதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(இம்மாதம் 7-ம் திகதி பாராளுமன்றத்தில் திரு அழகக்கோன் ஆற்றிய உரை.)



## கேட்டதும் இரசித்ததும்

அசரீரி

இலங்கையனைப்போல் கள்ளன் உலகத்தில் இல்லையென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இ. போ. ச.வில் பிரயாணச் சீட்டுக்கள் கொடுப்பதற்கு ஒரு மிஷின் இருக்கிறது. இதனைக் கொண்டக்டர்கள் (டக்டர்களல்ல!) கழுத்தில் தூக்கியிருப்பதை நாம்காணலாம். இந்த மிஷினை பிரிட்டன் உலகுக்கெல்லாம் விற்றது. பிற நாடுகளில் எல்லாம் இந்த மிஷினைக் கொண்டு திருப்திகரமான முறையில் பிரயாணச் சீட்டுக்கள் வழங்கப்பட்டு வருகின்ற நேரத்தில் எங்கள் நாட்டிலே மட்டும் எதிர் மாறாக நடந்திருப்பதாக அறியப்படுகிறது.

15 சதத்துக்குப் பிரயாணச் சீட்டுப் பெற்றால் மிஷினில் 5 சதத்துக்கு மட்டுமே கணக்குப் பதிவு செய்யப்படும் வகையில் முன்தானத்தை மிஷினில்திருத்தியமைக்கும் குறுக்குப் புத்தி இங்குள்ளவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. 15 சத நாட்டு வருமானத்தில் 10 சதத்தை விழுங்கும் துரோகிகள் இங்கிருந்தால் நாடு முன்னேறும் என்று எதிர்பார்க்கலாமா?

சாராயத்தின் விலையைக் குறைக்கப் போகிறோம் என்று உள்நாட்டு அமைச்சர் தகநாயகா அவர்கள் கூறிய சில நாட்களுக்குள் தென்னஞ் சாராயத்தின் விலையில் 2 ரூபா உயர்த்தப்பட்டது. கல்லோயா சாராயம் அப்படியே 8ரூபாவில் இருக்கிறது; கல்லோயாச் சாராயத்துக்கும் தென்னஞ் சாராயத்துக்கும் போத்தலில் ஒட்டப்பட்டிருக்கும் 'லேபல்' ஒன்றில் தான் வித்தியாசம். சாராயத்தை விழுங்கும் அப்பாவி ஒருவன் லேபலைப் பார்த்தே 2 ரூபாவைக் கூட்டிக் கொடுத்துவிட்டுதென்னஞ்சாராயமென்று தலை நிமிர்ந்து வீடு செல்லுகிறான். உடைத்துக் குடிக்கமலவன்று வாயில் கொண்டு செல்லத்தான் மூக்கிலே கசிப்பின் 'நறுமணம்' வீசுவதைக் கண்டு குடல் எல்லாம் வாயில் வருவதைப் போல் உணருகிறான்.

கள்ளக் காசு அடிக்கிற நவயுகத்தில் இருக்கிற இலங்கையனுககுச் சாராயப் போத்தலில் ஒட்டுகிற லேபலா அடிக்க முடியாதென ஒரு வெறியர் கூறிக் கொள்ளுகிறார்.

'கசிப்பு' என்றவுடனே பொலிசுக்காரன் பிடிக்கவருகிறான்...கல்லோயாச சாராயத்தில் பார்க்க கசிப்பு எந்த வகையில் குறைவு? அரசாங்கம் செய்யும் கசிப்பைப் போத்தலில் அடைத்து 10 ரூபா விற்கிறார்கள். ஊரிலே புழக்கத்திலேயிருக்கும் கசிப்பு 4 ரூபா தானே! சிக்கனம், சிக்கனம் என்று கூறும் அரசாங்கத்தின் மூளைக்கு இது தெரியவில்லையா?'' என்று ஒரு கசிப்படிகாரர் கூறிக் கொள்ளுகிறார்.

சாராயப் போத்தலின் மூடியைத் திருகி உடைக்கும்படி அந்த மூடியிலேயே எழுதப்பட்டிருக்கிறது. அதனைத் திருகி உடைப்பதற்கு முன்னர் மூடி முழுவதுமே கையோடு வந்து விடுவதாக நித்திய 'போத்தல் விழுங்கி' ஒருவர் கவலைப்படுகிறார்.

சாராயம் விற்கப்படும் சில இடங்களில் வெற்று மூடிகளும் கிடக்கின்றனவாம். அசல் சாராயத்தில் அரைவாசியை அபசாக்கிவிட்டு நசல் சாராயத்தைக் கலந்து கொள்ளை லாபம் சேர்க்கப்படுவதாக நாட்டிலே பேசப்படுகிறது. சாராயத்தைப் போத்தலில் அடைக்கும் இடத்திலிருந்து வெற்று மூடிகள் எப்படி வெளியில் வருகிறது என்பதை நாம் ஆராய்ச்சி செய்யத் தேவையில்லை. கள்ளர் வாழும் குகையல்லவா இந்தநாடு?

சாராயப் பெருமானின் திருவிளையாடல் சொல்லில் அடங்காதது! பொய்யிலே பிறந்து, பொய்யிலே வளர்ந்த சாராயப் பெருமானின் கதை முழுவதுமே பொய் தானா.

பொன்னான உடம்பைமண்ணாககி 'காயமே இது பொய்யடா' என்றதை மெய்யாக்கி, வாழவேண்டிய காலத்தில் இடுகாட்டுக்கு அனுப்பி வைக்க அரசாங்கம வடிக்கும் சாராயம் உதவிக் கொண்டு வருவது நாட்டின் உணவுப பிரச்சினைககுத் தீர்வு காண்பதற்காகத் தானா எனக் குடியினால் ஈரல பழுதடைந்த ஒருவர் ஆஸ்பத்திரியில் படுத்துக் கொண்டே கூறிக் கொள்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னைக் கடிதம்:

# நாகர்கோவில்: காங்கிரஸ்-தி.மு.க. கூட்டணியின் அடுத்த போர்க்களம்!

## காங்கிரஸ் வேட்பாளர் காமராசர்; அவருடன் மோதுபவர் யார்?

சென்னை மாநகராட்சித் தேர்தல் பரபரப்பு ஒருவாறு ஓய்ந்தவுடன், அடுத்த சனவரியில் நடக்கவிருக்கும் மற்றொரு இடைத் தேர்தல் பரபரப்பு இப்போது ஆரம்பமாகியுள்ளது. நாகர் கோவில் இடைத் தேர்தல்தான் அது.

சென்னை மாநகராட்சித் தேர்தலைவிட, நாகர் கோவில் பாராளுமன்றத் தொகுதி இடைத் தேர்தல் அதிக முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாகக் கருதப்படுகிறது இத்தேர்தல் தி. மு. க. கூட்டணி, காங்கிரஸ் ஆகிய இரு சாராருக்கு மிடையே கொள்கை அடிப்படையில் நடைபெறப் போகும் ஒரு பலப் பரீட்சையாக இருக்கப் போகிறது.

கடந்த (1967) பொதுத் தேர்தலில் இத்தொகுதியை காங்கிரஸ் கைப்பற்றியிருந்தது. தி. மு. க. கூட்டணி சார்பில் சுதந்திரக் கட்சி வேட்பாளர் போட்டியிட்டு இரண்டாவதாக வந்தார்.

வரப்போகிற இடைத் தேர்தலின் மற்றொரு முக்கியத்துவம், முன்னாள் காங்கிரஸ் தலைவர் திரு. காமராசர் இத்தொகுதியில் போட்டியிடப்போவது உறுதியாகி விட்டதுதான்.

தமிழ் நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டியும் நாகர் கோவில் இடைதேர்தலில் காமராசரே போட்டியிட வேண்டுமென ஒருமனதாக முடிவு எடுத்திருக்கிறது,

கடந்த தேர்தலை விட, அதிக வாக்குகள் வித்தியாசத்துடன், நாகர் கோவில் இடைத்தேர்தலில் காங்கிரஸ் வெற்றியடைந்தால் தான், காங்கிரஸ் பக்கம் மக்கள் திரும்புவது நிரூபிக்கப்படும் என்று காங்கிரஸ் தீர்மானம் கூறுகிறது. ஆகவே இந்த இடைத் தேர்தலை வைத்தே, தனது செல்வாக்கு ஏறியிருக்கிறதா இறங்கியிருக்கிறதா என்பதை காங்கிரஸ் தீர்மானிக்கப் போகிறது.

நாகர் கோவில் இடைத் தேர்தலில் தி. மு. க. கூட்டணி சார்பில் சுதந்திரக் கட்சி வேட்பாளரையே மோதவிடுவதற்கு தி. மு. க. தீர்மானித்துள்ளது. ஆனால் சுதந்திராவுக்கு இத்தொகுதியை விட்டுக் கொடுத்தால், தானும் போட்டியிடப் போவதாக இடதுசாரி கம்யூனிஸ்ட்கட்சி பயமுறுத்தி இருக்கிறது. தி. மு. க. வே போட்டியிட வேண்டும் என்று அது கூறுகிறது.

இவ்விஷயத்தில் இறுதி முடிவு செய்ய வேண்டியவர் அறிஞர் அண்ணா அவர்களே. காமராசா போட்டியிடப் போவதால் அவருக்கு ஏற்ற ஓர் எதிர்வேட்பாளரை நியமிக்கவே தி. மு. க. முயற்சிக்கும்.

இவ்விடைத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் டிசம்பர் 12 ல் தாக்கல் செய்யப்பட்டு 1969 சனவரி 8 ல் வாக்குப் பதிவு நடைபெறவிருக்கிறது.

### புதிய மேயர்

சென்னை மாநகராட்சியின் புதிய மேயராக தி. மு. க. வைச் சேர்ந்த வேலூர் நாராயணனும், உதவி மேயராக திரு. கே. கோவிந்தசாமியும் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சென்னையின் புதிய மேயரான திரு. நாராயணன் ஒரு வழக்கறிஞர் 39 வயது இளைஞர். சென்னை மாநகராட்சித் தேர்தலில் நாகம்மை நகரில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர். 1964 லிருந்து சென்னை மாநகராட்சி உறுப்பினராக இருந்து வருகிறார்.

தி. மு. க. சார்பில் மேயராக வருவதற்கு அறிஞர் அண்ணா இவரையே தேர்ந்தெடுத்தாரென்றால் அதிலிருந்து இவரது திறமைகளை அறிந்து கொள்ளலாம்.

புதிய மேயரைப் பல பிரச்சினைகள் எதிர் நோக்குகின்றன. காவேரியிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வரும் திட்டம் 3 ஆண்டுகளுக்கிடையில் பூர்த்தியாக்கப் படுமென்று மேயர் பதவியை ஏற்றவுடனேயே அவர் அறிவித்துள்ளார்.

# ஜனநாயகம் பற்றி ஈ.வெ.ரா. கருத்து

### பெரியார் கருத்து

ஜனநாயகத்தில் தமக்கு ஏன் நம்பிக்கையில்லை என்பதை சென்னை மாநகராட்சித் தேர்தலில் வெற்றி பெற்ற தி. மு. க. உறுப்பினர்களுக்கு நடைபெற்ற ஓர் பாராட்டுக் கூட்டத்தில் பெரியார் ஈ. வெ. ரா. தெரிவித்திருக்கிறார். அவர் கூறினார்:—

தேர்தலில் பொதுவாக ஒருவன் ஜெயித்துவிட்டால் தோற்றவன் ஜெயித்தவனை பணம் கொடுத்து ஜெயித்து விட்டான் என்று பேசுகிறான்.

ஜனநாயகத்தில் தோல்வியை ஒப்புக் கொள்ள வேண்டும். அதுதான் அழகு. அதை விட்டு விட்டு இப்படியெல்லாம் விவாதித்துக் கொண்டிருப்பது பொருத்தமல்ல.

ஜனநாயகத்தில் 'இருவர் போட்டியிட்டு இருவரில் ஒருவர் 1 லட்சம் வாக்குகளும் மற்றவர் அதைவிட ஒன்று அதிகமாக பெற்றாலும வெற்றி அவருக்குத்தான்.

அவர்தான் ஜனநாயக பிரதிநிதி, மக்கள் ஆதரவு அவருக்குத்தான் அதிகம் இருக்கிறது என்று பொருள்.

### நம்பிக்கை இல்லை!

ஆனால் இந்த ஜனநாயகம் எப்படிப்பட்டவர்களை பொறுக்குகிறது. காந்தியாக இருந்தாலும், நேருவாக இருந்தாலும், நோட்டு கொடுத்தால்தான் ஓட்டு போடுவார்கள்.

ஆகவே இந்நிலை [illegible]கத்தில் இருப்பதால்தான் எனக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லை என்கிறேன். காங்கிரஸ் கட்சி நாட்டைப் பற்றியோ நாட்டு மக்களைப்பற்றியே கவலைப்படும் ஸ்தாபனம் அல்ல. எனக்கு காங்கிரசை நன்றாகத் தெரியும். என்வயதை விட சிறிய ஸ்தாபனம்தானே. அவர்கள்தான் ஜனநாயகம் இந்த இழிநிலைக்கு வருவதற்கு காரணமாவார்கள்,

இவ்வாறு பெரியார் பேசினார்.

# சுப்பிரமணியத்துக்கு கருணாநிதி சாட்டை

சென்னை மாநகராட்சித் தேர்தலின் தீர்ப்புக்கள் தி. மு. க, வின் செல்வாக்கு சரிந்துவருகிறது என்பதற்கு அடையாளம் என்று திரு. சி. சுப்பிரமணியம் கூறிவருகிறார். இதற்கு சென்னையில் நடைபெற்ற தி. மு. க. கூட்டமொன்றில் கலைஞர் மு. க. சுடச்சுடப் பதிலளித்தார்.

திரு. கருணாநிதி கூறியதாவது:—

''1949-ம் ஆண்டு தி. மு. கழகம் துவக்கப்பட்ட காலத்தில் எண்ணூறு கழகக் கிளைகளே இருந்தன! அது ஆயிரமாகி இரண்டாயிரமாகி இன்று பதினோராயிரம் கிளைகளாகவளர்ந்திருக்கின்றன.

இருந்தாலும் சுப்பிரமணியம், 'தி. மு. கழகம் சரிந்துவிட்டது' என்று பேசிவருகிறார்; பரபரப்பான அறிக்கைகளை விடுகிறார். சென்னை மாநகராட்சித் தேர்தலைக் குறிப்பிட்டுக் காட்டிப் பேசுகிறார் அவர்.

1958-ஆம் ஆண்டு காங்கிரசு ஆதிக்கத்தில் சென்னை மாநகராட்சி இருந்து வந்தது. இன்னும் சரியாகச் சொல்ல வேண்டுமானால் காங்கிரசுக் கனதனவான்களின் ஆதிக்கத்தில் மாநகராட்சி இருந்து வந்தது.

அப்போது நமது கழகத்தின் சார்பில் அ. பொ. அரசும், முனுசாமியும்தான் அங்கம் வகித்து வந்தார்கள்.

இரண்டு பேர் இருந்த இடத்தில் இப்போது 68 பேர் இருப்பது தான் சரிவா? என்று அவர்களைக் கேட்கிறேன்.

சுப்பிரமணியம் சுட்டிக் காட்டியிருக்கிறார்-பொதுத் தேர்தலிலும் - இடைத் தேர்தல்களிலும் தி. மு. கழகம் பெற்ற வாக்குகளை விட இந்த மாநகராட்சித் தேர்தலில் குறைவான வாக்குகளைப் பெற்றிருக்கிறது; காங்கிரஸ் அதிகமான வாக்குகளை இந்தத் தேர்தலில் பெற்றிருக்கிறது'— என்று!

சரி; அந்த வாக்கு வித்தியாசத்தால் தி. மு. கழகத்தைத் தோற்கடித்துவிட்டதாக அவர்களால் கூறமுடியுமா? முடியாது. ஆனால், 'முக்கால் கிணற்றைத் தாண்டியிருக்கிறேன்' என்றுதான் கூறமுடியும்.

இப்படிப்பட்ட வெற்றிப் பெருமிதத்தை சுப்பிரமணியம் இங்கு மட்டும் கூறவில்லை; டில்லிக்கு அவசர அவசரமாகச் சென்று இந்திரா காந்தியிடம் 'காமராசர் கோட்டைவிட்ட மாநகராட்சியை நான் பிடித்து விட்டேன்' என்று கூறியிருக்கிறார்.

அதற்கு அந்த அம்மையாரும், 'அப்படியானால் யாரை நம் கட்சியில், மேயராக்கப்போகிறீர்கள்?என்று கேட்டிருக்கலாம்.

அதற்கு இவர், 'மேயராக்குகிற அளவுக்குப் போகவில்லை; முக்கால் கிணறு தான் தாண்டியிருக்கிறோம்' என்றுதான் கூறியிருக்க முடியும்.

இப்படி முக்கால் கிணறு தாண்டிவிட்டு, ஆகா! வெற்றிபெற்றுவிட்டோம்; அவர்கள் வீழ்ந்துவிட்டார்கள். என்பதில் என்ன பொருள் இருக்கமுடியும்?

தோழமைக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து மாநகராட்சியை நிர்வகிக்கும் நிலைக்குத் தி. மு. கழகம் வந்திருப்பது, 'தி. மு. க. வீழ்ச்சிக்கு அடையாளம்' என்று கூறுகிறார் சுப்பிரமணியம்!

அவருக்கு அவரது கட்சியின் வரலாற்றைக் கொஞ்சம் நினைவுபடுத்துகிறேன்.

1937-ம் ஆண்டு தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி படுதோல்வி அடைந்தது; பொப்பிலி அரசர் போன்ற ஜஸ்டிஸ் கட்சியின் பெருந்தலைகள் எல்லாம் உருண்டன.

அப்போது நான் திருவாரூர் பள்ளியில் முதலாம் படிவம் படித்துக்கொண்டிருந்தேன்; அங்கு காங்கிரசுக்காரர்கள் நடத்திய வெற்றிவிழா ஊர்வலத்தில் 'பொப்பிலியின் ஆட்சி அப்பளமாயிற்று' என்று குரல் கொடுத்தார்கள்; அப்போது அவர்கள் மிகப் பெரிய கட்சியாகத்தான் இருந்தார்கள்.

1947-ம் ஆண்டு இந்தியா சுதந்திரமடைந்தது; முதல் பொதுத்தேர்தல் 1952-ம் ஆண்டில் நடைபெற்றது.

சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர்கள் என்ற முழக்கத்தை முன் வைத்து காங்கிரஸ் தேர்தலில் ஈடுபட்டது.

பிரிக்கப்படாத சென்னை இராஜ்யத்தில் 1952-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு நேர்ந்த கதி என்ன?

தனிப் பெரும்பான்மையைக் காங்கிரசு பெற முடியாத அளவுக்கு இருந்தது.

காங்கிரசு தனிப்பட்ட முறையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்க முடியாது என்ற நிலை ஏற்பட்டதும்.—இராஜாஜியிடம் ஓட்டோடிச் சென்றார்கள்!

எந்த இராஜாஜியை அரசியலிலிருந்து விரட்டியடிக்கக்காமராசர் கோஷ்டி முயன்றதோ—அந்த இராஜாஜியிடமே அந்தக் காமராசர் கோஷ்டி சரண் புகுந்தது.

அவர்—உழைப்பாளர் கட்சியையும்— காமன் வீல் கட்சியையும் சேர்த்துக் கொண்டு அமைச்சரவை அமைத்தார். உழைப்பாளர் கட்சித் தலைவர் எஸ். எஸ். இராமசாமி படையாச்சிக்கும் காமன்வீல் கட்சித் தலைவர் மாணிக்கவேலருக்கும் அமைச்சுப் பதவிகள் அளிக்கப்பட்டன.

பிற கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்துதான் அன்றைய தினம் காங்கிரசு அமைச்சரவை அமைத்தது;

கூட்டுச் சேர்ந்து நிர்வாகத்தில் பங்கேற்பது சரிவுக்கான ஆரம்பம் என்றால் அன்று காங்கிரசுக்குச் சரிவு ஆரம்பம் ஆயிற்று என்று பொருள்?

ஆனல் உள்ளபடியே காங்கிரசுக்கு அன்று சரிவு ஏற்படவில்லை. அதற்கடுத்த 1957-ம் ஆண்டுத் தேர்தலிலும் 1962-ம் ஆண்டுத் தேர்தலிலும் தனிப் பெரும்பான்மைக் கட்சியாக வளர்ந்தது;

இந்தப் பழைய வரலாற்றை மறந்துவிட்டு தோழமைக் கட்சிகளுடன் சேருவதே சரிவுக்கு ஆரம்பம் என்கிறார் சுப்பிரமணியம்.

பிற கட்சிகளுடன்சேர்ந்து அமைச்சரவை அமைத்த அவர்களுக்கே சரிவு இல்லை என்றால்—பரம பாதக ஆட்சி புரிந்த அவர்களுக்கே 15 ஆண்டுக்காலம் வரை சரிவு ஏற்படவில்லை என்றால்— ஏழைமக்களுக்காக படியரிசித்திட்டமும—ஏழை விவசாயிகளுக்காகப் புன்செய் வரிரத்தும்— 'தமிழ நாடு' பெயர் மாற்றமும்— ஆதிக்க இந்தியை ஒழிக்க தீர்மானமும் —ஏழை மாணவர்களுக்கு இலவசப் படிப்பும் ஏற்படுத்திய தி. மு. க. கழக ஆட்சிக்கா சரிவு ஏற்படும்?

மாநகராட்சித் தேர்தல் நிச்சயமாக தி. மு. கழகத்திற்குச் சரிவு இல்லை!

'ஐயோ' என்று சொல்கிற அளவுக்கு எதுவும் நடந்துவிட வில்லை!

தி. மு. கழகம் மென்மேலும் மக்கள் பணியாற்றத் தன்னைத் தயார் படுத்திக் கொள்ள உதவும் ஓர் அறைகூவலாக மாநகராட்சித் தேர்தலை அது கருதியது. அந்த அறைகூவலை ஏற்று வெற்றியும் பெற்றது.

தி. மு. கழகம் போட்டியிட்ட இடங்கள் 98. இதில் வெற்றி பெற்றஇடங்கள்54.

பாதிக்கும் குறைவாக, 48 இடத்திற்கும் குறைவாக நாங்கள் பெற்றிருந்தால் தோல்வியடைந்து விட்டோம் என்று பொருள். ஆனல் 54 இடங்களைப் பெற்றோம்.

எங்களோடு மோதி காங்கிரசு தோல்வி அடைந்தது; எங்களுடைய தோழமைக் கட்சிகளுடன் போட்டியிட்டாவது வெற்றிபெற்றார்களா?

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாரச் சிறு கதை

## நி றை வு

அமைதியின்றித் தவித்துக் கிடந்தது அந்தத் தெரு. நானாவிதமான கடைகளும், நாலுமாடிக் கட்டிடங்களுமாக இரண்டு பக்கமும் நிறைந்திருந்த அந்தத் தெருவிற்கு 'டவுன் தெரு' என்று அவ்வூர் வாசிகள் பெயர் சூட்டியுள்ளார்கள்! ஒரு டவுனின் பரபரப்பும் ஆரவாரமும் மட்டுமின்றி, ஒரு டவுனில் இருக்கக்கூடியதாகக் கருதப்படும் சினிமாத் தியேட்டர், ஆஸ்பத்திரி முதற்கொண்டு ஒரு டவுனுக்கே உரித்தான பல கடைகளையும், 'மாளிகை'களையும் தன்னுள் அடக்கியிருந்த அத்தத் தெருவிற்கு அப்பெயர் பொருத்தமாகத் தான் அமைந்திருந்தது.

'டவுன் தெருவிலிருந்து ஒரு பர்லாங் தூரத்தில் வலது பறமாக ஒரு ரோட் பிரிந்து சென்றது. அத்தெருவில் நாலைந்து வீடுகளுக்கப்பால் ஒரு 'மாளிகை' இருந்தது; ஆமாம் ஒரு மாளிகைதான்! அதன் முகப்பிலேயே 'சுவர்ணமாளிகை' எனத் தங்கத் தகட்டில் பொறித்த பெயர்ப் பலகை ஒன்று தொங்கிக்கொண்டிருந்தது.

டவுன் தெருவின் அமைதியின்மையையும் தவிப்பையும் தன்னுள்ளத்தே தாங்கியவளாக சுவர்ண விக்கிரகம் போன்ற ஒரு பெண் அந்த மாளிகையின் தூணில் சாய்த்தவண்ணமிருந்து தலைவாரிக் கொண்டிருந்தாள்.

தோளில் தவழ்ந்து முதுகில் விளையாடிக் கொண்டிருந்த அவளது நீள் கூந்தல்—வளைந்து வளைந்து செல்லும் 'சிகரெட் புகை' போல் நெளிந்து நெளிந்து காணப்பட்டது.

'சிகரெட் புகை' என்றதும் அவள் மெல்லிதழ் மெதுவாக விரிந்தபோது, அந்த உதட்டுச் சிறையில் அகப்பட்டிருந்த தின்னப்படுவதற்கு என்று அமைந்த பற்கள் தாம் உரிய இடத்தில் அமைந்துவிட்டது குறித்து அடைந்த மகிழ்ச்சியால் வெண்மையாய்த் துலங்குவதும் மெதுவாகத் தெரிந்தது,

கைகள் தலையை வார, உள்ளம் எண்ணங்களை அசைபோட, தூணோடு சாய்ந்திருந்த அவளைப் பார்த்தால், 'மௌனமாக ஒரு பெண்ணிருக்கிறாள்' என்றுதான் எண்ணத் தோன்றும். ஆனால் உற்று நோக்கினால், 'சோகமான மௌனத்து'டன் அவளிருக்கிறாள் என்பதும் தெரியும்.

ஆனால், எவ்விதத்திலேனும் மூன்றாவதாக ஒரு அம்சமும் அதில் பிணைத்துள்ளது என்று எண்ண யாருக்குமே தோற்றாது. அவளது இந்த விசித்திர நிலையைப் பிரதிபலிப்பதாக அமைந்தது, வாரிமுடித்து அவள் தன் கூந்தலைப் பின்னிய விதம்.

ஆமாம்! மூன்றாகப் பிரித்து ஒற்றையாகப் பின்னியிருந்த அந்தப் பின்னலைப் பார்த்தால், அது 'ஒற்றைப் பின்னல்'லாகத் தான் தெரியும். உற்றுப் பார்த்தால், அதில் 'இரு பிரிவுகள்' உள்ளது என்றுதான் எல்லோருமே சொல்வார்களே தவிர, 'கூந்தல் மூன்றாகப் பிரிக்கப்பட்டது' என்று எவருமே சொல்லமாட்டார்கள். அது போலவே, அவளின் சோக மௌனத்திற்குப் பின்னணியான ''காதல் இழை''யும் மறைத்து அமைந்திருந்தது.

தலையை வாரிப் பின்னி விட்டு, தூணோடு, தூணைச் சாய்ந்து ஒரு காலை இரண்டு கைகளாலும் கட்டிக்கொண்டு எண்ணக் கடலில் மூழ்கினாள் அவள்.

●

வெள்ளையுடை தரித்து வெண் புறாக்களெனக் குழுமி நின்ற மாணவர்களது கட்டுக்கடங்காத மகிழ்ச்சியினால் அந்த விளையாட்டு மைதானம் ஆரவாரம் மிகுந்து காணப்பட்டது. விளையாட்டில் கலந்து கொண்டோரது மகிழ்ச்சியைவிட, அவர்களை வரவேற்றவர்களது மகிழ்ச்சி கரை கடந்திருந்தது. 'ஓடுவதும்—பாய்வதும் வினோதமில்லை' என்று 'வினோத உடைப்போட்டி' என்று ஒரு நிகழ்ச்சியைத் தனியாகவும் அமைத்திருந்தனர் நிர்வாகிகள். விளையாட்டில் இருந்த ஆரவாரமும் மகிழ்ச்சியும் பெரிதல்ல என்பதை விளக்குவதாக அமைந்திருந்தது இந்த வினோத'ங்களைப் பார்த்து ரசிக்க வந்த ரசிகர்களின் ஆரவாரமும் மகிழ்ச்சியும்.

'வேடன் - வேட்டைக்காரன் - குருடு - நொண்டி - பிச்சைக்காரன் - புல்லுக்காரி - மரக்கறிக்காரி - என்று தனியாகவும் திருமண ஊர்வலம் - பஜனை ஊர்வலம் என்று கூட்டாகவும் பலர் வித கோலங்களில் வந்து மகிழ்ந்து - மகிழ்வித்தனர்.

'ஐயா! பிச்சை' என்றும் - 'அம்மா! புல்லு வாங்கலையோ' என்றும் ஒவ்வொருவரும் பார்வையாளரின் பக்கம் வந்து 'குரல்' எழுப்பிச் சென்றனர். அந்த வரிசையிலேயே, தன் கணீரென்ற குரலில் 'மரக்கறிகளின் விலைப்பட்டியலைக் கூவிக் கொண்டு வந்தாள் தங்க விக்கிரகம் போன்ற ஒரு பெண்.

பார்வையாளரில் சிலர் பிச்சைக்காரனின் தகரத்தில் காசு போட்டும் - புல்லு வாங்காமலே. காசு கொடுத்தும் மாணவர்களின் உற்சாகத்தைத் தூண்டி வரவேற்றுக் கொண்டிருந்தனர். பெண்கள் வரிசையில் கூவி 'விற்று'க் கொண்டே அந்த மரக்கறிக்காரி ஆண்கள் பக்கம் வந்து சேர்ந்தாள்.

அவள் கடகத்து பொருட்கள் குறைந்து காசாக நிறைந்திருந்தது. இன்னும் இருந்தவற்றையும் விற்றாளானால் அவளின் '' வியாபாரம் '' முடிந்துவிடும்.

கூவிக் கூவி விற்றுக் கொண்டே வந்தவளிடம் அழகான ஒரு கரம் நீண்டு ஐந்து சதத்தைக் கொடுத்துக் 'கருவேப்பிலை'ப் பிடி ஒன்றினை வாங்கிக் கொண்டது. பொருளைக் கொடுத்துவிட்டு அதன் சிறப்பையும் விளம்பரப்படுத்தியபடியே நிமிர்ந்து பார்த்தாள். முகத்தில் தவளும் குறும்புப் புன்னகையுடன் — விழுங்கிவிடும் பார்வையுடன் நின்றான் ஒரு சுந்தர இளைஞன்.

ஒரு கணம் தயங்கி நின்றுவிட்ட அவள் ''இன்னும் ஏதாவது வேண்டுமோ ஐயா'' என்று தன் 'வியாபாரத்தை'' அத் தயக்கத்திற்குக் காரணமாகக் கூறிக் கொண்டே அப்பால் சென்று விட்டாள்.

போட்டி முடிந்தது. பரிசு பெறுபவர்களின் பெயர்கள் வாசிக்கப்பட்டன! இரண்டாம் பரிசை ''மரக்கறிக்காறி''யாக வந்த செல்வி. சுவர்னலதா பெறுகிறார் என்று அறிவித்த போது, ''அவளுக்கேற்ற பெயர் தான் அது'' என்று தன்னுள்ளத்தே கூறி மௌனமாகச் சிரித்தான் அந்த இளைஞன்.

பரிசை வாங்கிக் கொண்டு நிமிர்ந்த அவளுக்கு அந்தப் புன்னகை பெரும் பரிசாகக் கிடைத்தது, எல்லாம் முடிந்து செல்லும் போது தன் ''பரிசுக் கிண்ணங்களைச் சுமந்தவாறு எட்டி நடைபோட்டு அவள் வரும் போது—அவளுக்கு வெகு தூரத்தில் அந்த இளைஞன் சென்று காரைத் திறந்து கொண்டிருந்தான்.

''ஹலோ, டாக்டர் சுந்தரன்!'' என்று அழைத்தவாறே ஓடிவந்தவேறொரு இளைஞனை ஏற்றிக் கொண்டு கார் வட்டமடித்தபடியே மறைந்து சென்றது. காரின் ஒலியையும் மீறிக்கொண்டு ஒலித்தது, ''டாக்டர் சுந்தரன்'', என்ற அந்த ஒலி. அவளுள்ளம் ஒரு முறை சிலிர்த்தது.

''அழகன்'' என்று அவள் எண்ணியவள் வெறும் அழகனை மட்டுமன்றி ''அறிஞனை'' — ''டாக்டராக'' இருக்கிறானே! அந்த அழகன் ஒரு சாதாரண உத்தியோகத்தனாக இருந்தால் அந்தச் செல்வமகள் நிறையச் ''சீதனம்'' கொடுத்து அவனை அடைந்துவிடமுடியும். ஆனால், ''அறிஞனை —டாக்டராக இருக்க அவளுக்குப் ''பட்ட'' அறிவில்லையே!

ஏதோ, எண்ணத்தில் மூழ்கியிருந்தவள் தலையை நிமிர்த்தி எதிரே பார்த்தாள். அருள் நகை புரிந்து ஆறுமுகங்களுடன் காட்சியளித்த இளங் குமரன் படம் ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது.

எழுந்து அதன் எதிரே வந்தவள் நடுங்கும் தன் கரங்களைக் குவித்து, ''முருகா! அந்த ''அழகரை—அறிஞரை'' என்னால் அடைய முடியாது; அது எனக்கு நன்றாகத் தெரியும்; அதை நான் உன்னிடம் கேட்கவில்லை. நான் அவரை மணந்து அவரில்லத்தில் வாழ முடியாதவள்; ஆகையால், இறைவா! நான் இறந்து அவருள்ளத்தில் வாழுவதற்காவது எனக்கு அருள்புரி! என வணங்கி நின்றாளவள்.

●

'சுவர்ணா! 'டவுன்தெரு'வில் போய், அந்தத் தையற்காரனிடம் உன்னுடைய 'பிளவுஸை' வாங்கியா! ஆறுமணிக்கெல்லாம் 'அவை' வந்துவிடுவினம்! என்று அவளை அழைத்துக் கூறியபடியே வந்தாள் அவள் தாய். அழுத கண்ணீரைத் துடைத்து பவடர் பூசியபடியே வெளிக்கிளம்பியவளுக்கு, 'அவை' என்ற வார்த்தை அம்பாகத் தைத்தது; 'அவை' அவளைப் 'பெண்' பார்க்க வரப்போகிறவர்கள் தான்.

'கேற்'றைத் திறந்து கொண்டு சென்றவளைப் பார்த்து 'கெதியாக வா; டிஸ்பென்ஸரிக்கு இப்போ ஒரு புது டாக்டர் வந்திருக்கிறாராம்; அவரிடம் போய் காந்தனைக் 'காட்டிக் கொண்டு' வரவேண்டும்.' என்று கூறிவிட்டு உள்ளே சென்றாள் அம்மா.

'டாக்டர்!' இந்த டிஸ்பென்ஸரிக்கு எத்தனை டாக்டர்கள் வந்து போய்விட்டார்கள். ஆனால், அவளுள்ளத்தில் கனவு நிலையை ஏற்படுத்திவிட்ட அந்த டாக்டர் சுந்தரன் மட்டும் வரமாட்டாராமே'' ஏங்கியபடியே சென்றாள் சுவர்ணா.

ஏதோ நினைவாக— எங்கோ பார்வையாகச் சென்ற அவளுக்கு அந்தத் திருப்பத்திற்கு, ''ஹோர்ன்'' அடிக்காமலே வந்த காரின் சப்தம் கேட்கவில்லை. திடீரென வந்தகார் சடாரென அவளை அடித்தபோது தான்—தன் இனிய டாக்டரின் நினைவோடு 'அம்மா' என்று வீறிட்டுக் கத்தியபடியே கீழே விழுந்தாள். ஆட்களும் கூட்டமுமாக, அந்த 'டவுன் தெரு'வே அவளைச் சூழ்ந்து விட்டது. இரத்தம் நீராகப் பெருக, செந்தாமரையிலிருக்கும் திருமகள் போல் அவள் விழுந்து கிடந்தாள்.

அந்த வேதனையிலும் இரைச்சலிலும் கூடயாரோ கார் நம்பர் கேட்க, எவரோ அவளை அடித்த காரின் இலக்கத்தைக் கூறுவது தெளிவாக அவள் காதில் விழுந்தது. அது— அந்த நம்பர்—

அவள் மனதில் பதிந்துவிட்ட அந்தக்காரின்— நம்பர் தான். தன்னருகே குனிந்து நின்ற பொலிஸிடம் முக்கி முனகி 'அந்தக் காரில் தவறில்லை என்று அவள் கூறும்போது அவள் வாயிலிருந்தும் இரத்தம் கொட்டியது. அரை நினைவோடு கிடந்தவளை, அந்தக் காரிலேயே டிஸ்பென்ஸரிக்கு எடுத்துச் சென்றார்கள்.

கட்டிலில் படுத்திருந்த அவள் வலது கரத்தைத் தூக்கி 'நாடி' பார்த்தபடியே தன் மற்றக்கரத்தை அவள் மூக்கில் வைத்து, 'மூச்சு' வருகிறதா, என்று பார்த்தார் டாக்டர். சுடரொளி வீசி விட்டு அணையப் போகும் ஒளி விளக்குப் போல் அவள் முகம் மலர்ந்து விரிந்தது. பார்வை நாற்புறமும் சுழன்று டாக்டரின் மேல் பதிந்து நிலை குத்தி நின்றது. அந்த டாக்டர்—?

கதிரவனின் ஒளியை நன்றாகப் பெற்றுவிட்டாற்போல் மலர்ந்து விகசித்தது, அவள் முகம். 'எண்ணம்' நிறைவேறிவிட்டதே என்று அவள் நெஞ்சக் கடல் ஆரவாரித்தது. அவளின் தண்டுக் கரத்தைப் பிடித்தபடி நின்ற டாக்டர் சுந்தரனின் கண்களோ அவளை முழுவதும் பார்த்து ரசிக்க முடியாதனவாய்க் கலங்கிக் கண்ணீருகுத்தன. தன் 'எண்ணம்' நிறைவேறி விட்டதற்கு அறிகுறியாகத் தன் முகத்தில் விழுந்த கண்ணீருடன் தன் ஆவியைக் கலக்க விட்டு நிம்மதியாகக் கண் மூடினாள் சுவர்ணா.

அவளுடலில்— தூய வெண்ணிற ஆடையைப் போர்த்தி விட்டு வந்த டாக்டர்— அவளைக் கொன்ற எமனாக நின்ற, தன் பழைய காரைப் பார்த்து மனம் வெதும்பியவராகத் தன் பார்வையை அப்பால் செலுத்திக் கொண்டார். பாவம்! அவர் காரால் தன்னை அடித்துவிட்டு நிற்பதாக 'அவரது சுவர்ணா' எண்ணிக் கொண்டு 'அந்தக்' காரை மன்னித்து விட்டு தன் மேலேயே பழியைப் போட்டுக் கொண்டு மடிந்தது அவருக்கு எங்கே தெரியப் போகிறது?

செல்வி: குண நட[illegible]

# கலைக்கழகநாடகப்போட்டியில்
## செம்பியன் செல்வனுக்கு முதற்பரிசு

இலங்கைச் கலைக் கழகத்தின் தமிழ் நாடகக் குழு நடத்திய 1968ம் ஆண்டுக்கான தமிழ் நாடக எழுத்துப் போட்டியில் பொதுநாடகத் துறையில் ஈழத்தின் பிரபல எழுத்தாளரான செம்பியன் செல்வனுக்கு முதற் பரிசு கிடைத்துள்ளது.

விபரம் வருமாறு:

### பொது நாடக எழுத்துப் போட்டி

**1-வது பரிசு ரூபா 350-00**

(ஆ. இராஜகோபால் (செம்பியன் செல்வன்) ஆசிரியர் புனித சூசையப்பர் கல்லூரி, திருகோணமலை) நாடகத்தின் பெயர்: ''இருளில் எழும் பெருமூச்சுகள்.''

**2-வது பரிசு ரூபா 200-00**

(என். வீரமணி நடன ஆசிரியர் சுண்ணாகம்) நாடகப் பெயர்: ''திருக்கேதீச்சரக் குறவஞ்சி''

**3-வது பரிசு: ரூபா 150-00**

(சீ. சிவஞானசுந்தரம் (கோட்டைப்புகையிரத நிலையம்கொழும்பு)'' ஆசையும் பாசமும்''

### ஓரங்க நாடக எழுத்துப் போட்டி

**1-வது பரிசு ரூபா 150-00**

சீ. பன்னீர்ச்செல்வம் கொற்றகங்கை, இறங்கலை. (''கண் கெட்டபிறகு'')

**2-வது பரிசு: ரூபா 100-00**

ஐ. இராசரத்தினம் சைவ மகாஜன வித்தியா சாலை, இணுவில் சுன்னாகம் (''நான் அபபவே சொன்னேன்'')

**3-வது பரிசு: ரூபா 75-00**

இராஜந்திரன், 7 சூரிய ஒழுங்கை, மட்டக்களப்பு (''முறுவல்'')

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● காசோலையில் தமிழ்! ● தமிழ்தலைமை யாசிரியர்கள் மீது சிங்களத்திணிப்பு இரத்து ● திருமலையில் பல்கலைக்கழகம்! ● தமிழ்ச்சட்ட அமுல்சுற்றறிக்கை! ● அரசாங்க ஊழியருக்கு தீங்கு நேராது!

# பிரதமர் - தமிழரசார் பேச்சுவார்த்தையின் பயன்!

## தமிழ் மலர்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பந்தியிலுள்ள 'அது' என்பது எதனைக் குறிக்கின்றது? ஒழுங்கைப் பின்பற்றுதல் (அல்லது ஒழுங்கு) தானாகவே ஏனைய பந்திகளுக்குரிய ஒழுங்கை உண்டாக்குமா? ஏனையபந்திகளினின்றும் பிரிந்து நிற்கும் பந்தியாது? முதற் பந்தியா? கடைப் பந்தியா? கட்டுரையாளனை விதந்துரைத்தல் வேண்டும். முதற்பந்தியிற் கூறப்பட்ட கடிதம், அறிக்கை முதலியன, எழுதுவோருடைய சிந்தனை ஒழுங்கிற் செல்லப் பழகாதா?

'சிந்தனையும் ஒழுங்கிற் செல்லப் பழகிக் கொள்ளும்' எனின் வேறெதுவம் ஒழுங்கிற் செல்லப் பழகிக் கொள்ளும்?கையுமா? பேனையுமா? கட்டுரையுமா? பந்தியுமா......?

### நான்காம் பந்தி

'பொதுவாக ஒரு பந்தியின் முதலில் ஒருகருத்துத் தோன்றி முளை கொள்ள அதன் இறுதி வாக்கியம் அதற்கு முடிவுகொடுக்கும். இடையிலே, பொருள், தொடர்ச்சி குலையாது பந்தியில் ஆளப்படுப் கருத்தை வளர்த்து, விளக்கி, உறுதிப்படுத்தி, ஈற்றில் முடிவுக்குக் கொண்டு செல்லும்.

'இடையிலே பொருள்...... கொண்டு செல்லும்' எனும் இரண்டாவது வாக்கியம் கூற முயல்வது யாது? ''பொருள் கருத்தை முடிவுக்குக் கொண்டு செல்லும்' என்பது மருளுரைக்கு நல்லதோர் உதாரணமாகும்.

ஐந்துபந்திகளைக்கொண்ட இப்பக்கத்தில் இத்தகைய மயக்கங்களும் மலைவுகளும் பிறழ்வுக் கூற்றுக்களும் மட்டுமன்றித் தரிப்புக்குறியீட்டு வழு, புணர்ச்சி வழு எழுதுப்பிழை முதலியனவும் நிறைய உள.

'இதனாற், சொல்லப் புகுந்த' 'பொருளுந்தெளிவடையாது சொல்லப்புகுந்த' 'குறைபாடுகளைபந்தியமைப்பதனால்' 'கருத்திற் கொள்ளத்தக்கனவாகும்' (பக்.2); பந்திகளுக்குரிய...' என்பன காண்க.

### Ruskin

இரண்டாம் பக்கத்தில் Ruskin எனும் ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்திற் புகுத்தியிருக்க வேண்டியதில்லை, தமிழ் உரை நடைப் பகுதிகளில் ஆங்கிலச் சொற்களைச் சேர்த்து எழுதல், S. K. செல்லையா என்று ஆங்கில எழுத்துக்களை இணைத்து எழுதல் முதலியன அடிமை வாழ்வுக் காலப் பழக்கங்களாகும். இவை இன்று மறைந்து விட்டன.

மூன்றும் பக்கத்தில் 'கருத்துப்பொருண்மை' என்றொரு தொடரை நூலாசிரியர் ஆளுகின்றார். இத்தொடரை அவர் தமது பந்தி அமைப்பு விளக்கத்திலேனும் தாம் காட்டிய உதாரணத்திலேனும் ஆளவில்லை. இத்தொடரின் கருத்து யாது? ஒருபந்தி நுதலியதை — பந்தியின் கருவை - தலைமைக்கருத்தை முதன்மைக் கருத்தை இவ்வாறு குறிப்பிடுகின்றார் எனின் இத்தொடர் இவற்றுள் ஒன்றைக் குறிப்பிடுதற்கு எவ்வாற்றானும் இயைபுடையதன்று.

'முக்கிய கருத்துப் பொருண்மை' என்று இத் தொடரை அடையுடன் வழங்கிப்பந்திகளில் முக்கிய மற்ற கருத்துப் பொருண்மைகளும் உண்டென்பதையும் பெறவைக்கின்றார். 'முக்கிய கருத்துக்கும்' 'முக்கிய கருத்துப்பொருண்மைக்கும்' வேறுபாடு உண்டா? இது வெற்றுச் சொல்லாக்க விளையாட்டு.

விந்தைமிகு சுந்தரக்குருக்களையும் வல்லிநிகர் சங்கரியையும் அவர்களுடைய மனநோயையும் ஊமைச் சுகத்தையும் அடுத்த கட்டுரையிற் காண்போம்.

—தொடரும்

## நாகர்கோவில்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தோழமைக் கட்சிகள் போட்டியிட்ட இடங்கள் 24: அவற்றில் அந்தக் கட்சிகள் வெற்றிபெற்ற இடம் 14. அகவே தோழமைக் கட்சிகளுடன் போட்டியிட்டும் தோற்றார்கள்!

இவ்விதம் எங்களுடன் போட்டியிட்டு ஒரு தோல்வி தோழமைக் கட்சிகளுடன் போட்டியிட்டு இன்னொரு தோல்வி!

ஆக இரண்டு தோல்விகளை மாநகராட்சித் தேர்தலில் பெற்ற காங்கிரசார் எங்களைப் பார்த்தா தோல்வியடைந்த கட்சி என்று கூறுவது?'

—

## தொலைபேசி...

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் அரசாங்கத்தைக் கேட்டுக் கேட்டு அலுத்து விட்டார்கள்.

### மன்னாரிலும் இதே நிலை!

மன்னார்த் தொகுதியிலும் இந்தக் குடியேற்றத் திட்டத்துக்குரிய ஒரு உப தபால் நிலையம் இருக்கிறது. அதற்கு வேண்டிய மதிப்பீடுகள் எல்லாம் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே செய்யப்பட்டு விட்டன. ஆனால் இன்னும் ஒரு தபால் ஊழியர் நியமிக்கப்படவில்லை.

எனவே கிராமப்புறங்களிலே, கடற்கரையை அடுத்துள்ள இடங்களிலே, குடியேற்றத் திட்டங்களிலே வாழ்கின்ற மக்களுக்குவேண்டிய தொலைத் தொடர்பு வசதிகளைக் கொடுக்க வேண்டும்.

**த**மிழ்த் தலைமை ஆசிரியர்களும், அதிபர்களும் 55வயதுக்குப் பிறகுசேவை நீடிப்பதற்கு சிங்களமொழித் தேர்ச்சி பெற வேண்டுமென விதிக்கப்பட்டிருந்த நிபந்தனை இரத்துச் செய்யப்படும்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசாங்க அலுவலகங்கள், கூட்டுத்தாபனங்கள் அரசாங்க சார்பான நிறுவனங்கள் பொதுமக்களுக்கு வழங்கும் காசோலைகள் அனைத்திலும் தமிழும் கட்டாயமாக இடம்பெற வேண்டும்.

பிரதமருடன் கடந்த 12ம் திகதி இரவு தமிழரசார் நடத்திய பேச்சுவார்த்தையின் பயனாக மேற்கண்ட இரு கொள்கைகளும் அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

தமிழ்த் தலைமை ஆசிரியர்களுக்கு 55 வயதுக்கு மேல் சேவையில் நீடிப்பதற்கு சிங்களத் தேர்ச்சி இதுவரை சோரப்பட்டுவந்ததும் அதை எதிர்த்து தமிழாசிரியர் சங்கங்கள் கிளர்ச்சி செய்து வந்ததும் தெரிந்ததே.

இப்பொழுது தமிழரசார் முயற்சியினால் தமிழ்த் தலைமைஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் விடிவு ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்த சிங்கள நிபந்தனை இரத்து செய்யப்பட்டிருக்கிறது.

இதே போல வடக்கு கிழக்கில் இனிவழங்கப்படும் அரசாங்க காசோலைகள் அனைத்திலும் தமிழும் கட்டாயமாக இடம்பெறும். இதுவும் தமிழரசார் முயற்சியால் நடைபெற்றிருக்கிறது.

காசோலைகளில் தமிழும் கட்டாயமாக இடம்பெற வேண்டுமென அரசகரும மொழித் திணைக்கள ஆணையாளர் திரு. பீட்டர் அபேயசேகரா ஓர் சுற்றறிக்கை மூலம் இம்மாதம் 14ம் திகதி உத்தரவிட்டுள்ளார்.

சிங்களத் தேர்ச்சி பெறத் தவறிய அரசாங்க ஊழியர்களுக்கு வேலைநீக்க அறிவித்தல் கொடுப்பது அநீதியெனவும் சிங்களம் படிப்பதற்கு போதுமான அவகாசம் அவர்களுக்கு அளிக்கப்படவேண்டுமெனவும், சம்பளத்துடன் விடுமுறை வழங்கினால், சிங்களம் படிப்பதற்கு அவர்களுக்கு வசதியாக இருக்குமென்றும் தமிழரசார் பிரதமரிடம் எடுத்துக்கூறியதாக தெரிகிறது.

சிங்களம் படிக்கத் தவறிய அரசாங்க ஊழியர் பிரச்சினையில் தாம் நியாயமாக நடப்பதாக பிரதமர் கூறினாராம். இது சம்பந்தமாக திறைசேரிச் சுற்றறிக்கையொன்று விரைவில் வெளியிடப்படவிருப்பதாக பிரதமர் தெரிவித்தார்.

### பல்கலைக் கழகம்:

திருமலையில் பல்கலைக்கழகம் அமைக்கும் கொள்கையை தாம் ஏற்றுக்கொள்வதாகவும் ஆனால், காலியிலும் திருமலையிலும் ஒரே சமயத்தில் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்பதே தமது நோக்கமாம் என்றும் பிரதமர் தமிழரசாரிடம் தெரிவித்ததாக அறியப்படுகிறது.

### தமிழ்ச் சட்ட அமுல்:

தமிழ்மொழிப்பிரமாணங்களை அமுல் நடத்தி வடக்கு கிழக்கில் தமிழை நிர்வாக மொழியாக்குவது சம்பந்தமான திறைசேரி சுற்றறிக்கை விரைவில் வெளியிடப்படும்.

## புதிய...

1-ம்பக்கத் தொடர்ச்சி)

புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளது.

தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை தற்போது தி. மு. க. நிர்வகித்துவருவதால் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரின் நியாயமான இக்கோரிக்கையை தமிழக முதலமைச்சரும் ஏனைய அமைச்சர்களும் உணர்ந்து மத்திய அரசை நெருக்கி புதிய தூதுவராக தமிழர் ஒருவரை நியமிக்கச் செய்வார்கள் என்று கருதப்படுகிறது.

இது சம்பந்தமாக தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணாவுக்கும், பாரதப் பிரதமர் இந்திராகாந்திக்கும் அவசர மகஜர் ஒன்றை அனுப்பி வைப்பதற்கு இ. தி. மு. க. பொதுச்செயலாளர் திரு. ஏ. எஸ். மணவைத்தம்பி ஏற்பாடு செய்து வருகிறார் என்று தெரிகிறது.

இலங்கை இந்திய ஒப்பந்தம் அமுல் செய்யப்படும் இன்றைய காலகட்டத்தில் இந்தியத் தூதராக தமிழர் ஒருவர் பதவி வகிப்பது இந்திய வம்சாவழியினருக்கு பல வழிகளில் பயன்தருவதாக இருக்கும் என்று இ. தொ. க. பிரமுகர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.




எல்லோரும் புகைப்பது

கமலா பீடி

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

கமலா ஸ்டோர்ஸ்,

நிர். 15, செட்டியார் தெரு,
கொழும்பு-11

தொலைபேசி
3597—6522

தந்தி: தாமரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைபேசி. தபால் வசதிகளின்றித் தொல்லைப்படுகிறார்கள் கிராமப்புற மக்கள்!

## அவர்தம் கஷ்டம் நீக்கி சமுதாயநீதி நிலைபெறச்செய்வீர்!

### பாராளுமன்றத்தில் பண்டிதர் இரத்தினம்

“தொலைபேசி வசதிகளும், வீடு வீடாகத்தபால்கொடுக்கும் வசதிகளும் கொடுக்கப்படாத எல்லாத் தபால் நிலையங்களுக்ும், உப தபால் நிலையங்களுக்கும், இவ் வசதிகளைக் கொடுப்பதற்கு உடனே அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும், இவ்வாறு செய்து சம வாய்ப்புக்கு வழிகோலிச் சமுதாய நீதி கால்கொள்ளச் செய்யும்வரை தபால் தொலைத் தொடர்புத் துறைகளில் வேறெவ்வகை ஆக்கத்துக்கும் இந் நாட்டுப் பணத்தை செலவு செய்யக் கூடாதெனவும் இச் சபை கருதுகிறது”

இவ்வாறு கூறும் பிரேரணையொன்றை இம் மாதம் 7- திகதிபாராளுமன்றத்தில் கிளிநொச்சி பா. உ. பண்டிதர் கா. பொ. இரத்தினம் கொண்டுவந்தார்.

இப் பிரேரணையை முன்மொழிந்து அவர் பேசியதாவது:

‘இந்தப் பிரேரணை இரண்டு பகுதிகளை உடையதாக இருக்கிறது. வசதிக் குறைவான இடங்களிலே, பல ஆண்டுகளாக, தொலைபேசி வசதிகளும், வீடு விடாகத் தபால் பெறும் வசதிகளும் இழந்து இவ் வசதிகள் எங்களுக்குக் கிடைக்குமா என்று ஆண்டாண்டு தோறும் அவலப்படுகின்ற மக்களுக்காக அவர்களுக்குத் தேவையான வாய்ப்புக்களைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கூறுகிறது ஒரு பகுதி. இந் நாட்டின் பணத்தைப் பெரும்பாலும் அவற்றுக்குத்தான் செலவு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறது மறறப் பகுதி.

#### கிராமப்புற மக்களுக்கு இதுதானு?

பட்டணங்களிலே வாழுகின்றவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியது அவசியம்தான். என்றாலும், எங்களுடைய செலவுத் தொகை தொடர்பாக நோக்குகின்ற பொழுது, ஒரு கோடியே அறுபத்தெட்டு இலட்சத்து ஐம்பத்தொன்பதிறுயிரத்து நாற்று நாற்பத்து நான்கு ரூபா மட்டுமே வரவு செலவுத் திட்டத்திலே அஞ்சல் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்ட செலவுத் தொகையாகக் காணப்படுகிறது.



தொலைபேசித் தொடர்பு வசதிகளுக்காக 19 இலட்சம் ரூபா மாத்திரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய 12 சதவீதம்தான் தொலைபேசித் தொடர்பு வசதிக்கான மொத்தச் செலவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இந்த 12 சதவீதத் தொகையில் பட்டணப் பகுதிகளுக்குச் செலவிடப்பட்டு மிச்சம் எவ்வளவு இருக்குமென்று நாங்கள் சொல்ல முடியாது. எனவே, இவ்வாண்டிலே தொலைபேசித் தொடர்பு வசதிகளை மக்களுக்குக் கொடுப்பதற்காகச் செலவழிக்கப்படுவதிலே 12சத வீதம் தான் பொதுவாகக் கிராமப்புற மக்களுக்கு கொடுக்கத் தக்க அளவிலே அமைந்திருக்கிறது.

#### கிராமவாசிகள் படும் இன்னல்கள்

ஏனைய செலவினங்கள் முழுவதும் பெரும்பாலும் பெரும் பட்டணங்களுக்குரிய வசதியைச் செய்யவும் வெளியிடங்களுக்கான வசதிகளைச் செய்து கொடுக்கவும்தான் செலவழிக்கப்படுமென்று வரவுசெலவுத் திட்டம் கூறுகிறது.

கொழும்பிலேயிருக்கின்ற ஒருவர் பதுளையிலே இருக்கும் ஒருவருக்கு தொலைபேசி மூலம் நேரே பேசுவதைநாம் எதிர்க்கவில்லை. ஆனால், கொழும்பிலே இருப்பவர்களுக்கு இத்தகைய வசதிகளைக் கொடுப்பதற்கு முன் இத்தகைய வசதிகள் எதுமில்லாமல் 15, 20 மைல் தூரம் நடந்துசென்று தந்தி அனுப்ப வேண்டிய நிலையிலிருக்கும் கிராமவாசிகளுக்கும் கடற்கரையோரங்களில் வாழ்பவர்களுக்கும் குடியேற்றத் திட்டங்களில் வாதிபவர்களுக்கும் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும்.

கிராமப்புற மக்கள் படும் இன்னல்கள் ஒருவேளை பட்டணப் பகுதிகளுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் அங்கத்தவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம்; நன்கு முன்னேற்றம் அடைந்த தொகுதியிலே உள்ளவர்களுக்கும் தெரியாமலிருக்கலாம் எனக்குத் தெரிந்த வரையிலே வடக்கிலும் தெற்கிலும் முன்னேற்றத்தில் மிகவும் பின் தங்கியிருக்கும் மக்கள் தந்தி வசதி இல்லாமல், தபால்களை வீடு வீடாகப் பெறும் வசதி இல்லாமல் மிகவும் இடர்ப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

#### பல்லவராயர் கட்டு

என்னுடைய தொகுதியிலே பல்லவராயர் கட்டு என்ற கிராமசபை ஒன்று இருக்கிறது. அந்தக் கிராமசபையின் முழுப் பகுதியிலும் தந்தி அனுப்ப வசதியில்லை, அந்தக் கிராமசபை எல்லைக்குள் இருப்பவர்கள் தந்தி அனுப்புவதானுல் 18, 20 மைல தூரம் நந்துடபோக வேண்டும். அவர்கள் பஸ்வண்டிக்குக் காத்திருந்து அது கிடைக்காமல் திரும்பிப் போக வேண்டிய நிலையும் ஏற்படலாம்.

1968-ம் ஆண்டிற் கூட இப்படிப்பட்ட ஒரு நிலை இலங்கையிலே இருக்கும் என்றால், அதுவும் கொழும்பிலுள்ளவர்கள் பதுளையிலுள்ளவர்களோடு நேரடியாகப் பேசக்கூடிய வாய்ப்புக்களைச் செய்து கொடுக்கும் சூழ் நிலை இருக்கும் நேரத்தில், இருக்கும் என்றால் அதைச் சமுதாய நீதி என்று சொல்ல முடியாது. ஆகையால், சாதாரண ஏழை மக்களுக்கு—வேறு வசதி இல்லாமல் கிராமங்களில் இருக்கும் மக்களுக்கு — இத்தகைய வசதிகளைச்செய்து கொடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும். இதற்காக வெளிநாட்டுப்பண உதவி கிடைத்தால் அதையும் பயன்படுத்துங்கள் என்று கூறுகிறேன்.

#### ஒரு கோடியை ஏழைகளுக்கு செலவிடுக

பெரிய கொழும்புப் பிரதேசம் என்று சொல்லப்படுகின்ற பகுதிக்குத் தொலைத் தொடர்பு வசதி செய்து கொடுப்பதற்கு 5 கோடியே 75 இலட்சம் ரூபாவை அரசாங்கம் செலவு செய்கிறது. இதற்குவெளிநாட்டிலிருந்து கடனுக 3 கோடியே 66 இலட்சம் ரூபா கிடைக்கிறது. இந்நாட்டுப் பணம் இரண்டு கோடி ரூபா தான் இதற்காகச் செலவிடப்படுகின்றது. அதில் ஒருகோடி ரூபாவை ஏழை மக்களுக்கு தொலைத் தொடர்பு வசதி செய்து கொடுப்பதற்கும் தபால்களை வீடு வீடாகக் கொண்டு சென்று கொடுப்பதற்கும் செலவு செய்தால் அவர்களுக்கும் இந்த நாட்டில் சம வாழ்வைப் பெறும் வாய்ப்பைக் கொடுப்பதாக இருக்கும்.

#### வாக்குறுதி நிறைவேறவில்லை,

அமைச்சரவர்கள் என்னுடையதொகுதிக்கு1967ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வருகை தந்தார்கள். அப்பொழுது அவருக்குத் தர்மபுரத்தில வரவேற்பு ஒன்று அளித்தோம். அதில் கலந்து கொண்ட மக்கள் அவரிடம் ஒரேயொரு வேண்டுகோளை விடுத்தார்கள். “எங்களுடைய உப தபால் நிலையத்தில் வீடு வீடாகத் தபால் கொடுக்க வசதி இல்லை. அந்த வசதியைச்செய்து தரவேண்டும்” என்று கேட்டார்கள். நிச்சயமாக அதைச் செய்து கொடுக்கிறேன்? அடுத்த நிதி ஆண்டு தொடக்கம்—ஐப்பசி தொடக்கம்—அதைச் செய்துதருகிறேன் என்று அமைச்சர் கூறினார்.

ஆனல் ஒரு வருடம் முடிந்து விட்டது. தபால் கொடுப்பதற்குத் தபால் ஊழியர்கள் ஒருவரும் நியமிக்கப்படாததால் மக்கள் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

#### கிராஞ்சி

இது போலவே கிராஞ்சிக் குடியேற்றத் திட்டத்திலே வாழும் மக்களும் தபால் பெற முடியாமல் ஒவ்வொரு நாளும் முறையிட்டுச் சலிப்படைந்து விட்டார்கள், அப்படித்தான் வவுனிக்குளத் திட்டத்திலும் அதிலுள்ள மக்கள் இன்னும் அரசாங்கம் எங்களுக்குத் தபால் கொடுப்பதற்கு வசதி செய்யாவிட்டால் நாங்களே ஒருவரை நியமித்துத் தபால்களைக் கொடுக்கிறோம் என்கிறார்கள்.

குடியேற்றத்திட்ட மக்கள் உணவு உற்பத்தியில் ஈடுபட்டிருக்கிறார்கள், அவர்கள் ஒவ்வொரு நாளும் உப தபால் கந்தோருககு போய் தங்களுக்குத் தபால் வந்ததா என்று கேட்டுக் கொண்டிருக்க முடியாது.

(9-ம் பக்கம் பார்க்க)

---

## சுகுணு ஏன் அழுதாள்?

நிமிடக் கதை

சுகுணு விசித்து விசித்து அழுகின்றாள். அன்றைய வாரப் பத்திரிகையொன்று மேசைமேல் விரித்தபடி கிடக்கிறது, வைத்தவைத்த இடத்தில் பொருட்களெல்லாம் இறைந்து கிடக்கின்றன. சமையற் கட்டில் பூனை படுத்துறங்குகிறது. இன்று வெளியூர் சென்ற தன் கணவன் சுந்தரம் வருவான் என்று தெரிந்திருந்தும் சமையல் செய்ய எண்ணமில்லாமலே இருந்து சுகுணு விம்முகிருள். எதையோ பறி கொடுத்தவள் போன்று அடிக்கடி ஏக்கமடையவும் செய்தாள்.

இவ்வேளையில் வாசலில் ‘சரக், சரக்’ என்னும் பாதரட்சையின் ஒலி யாரோ வருவதற்குரிய அடையாளத்தைக் கட்டியங் கூறியது. நிமிர்ந்துகூட நோக்காமல் மேசை மீது கிடந்த வாரப் பத்திரிகையை வெறித்து நோக்கிக்கொண்டிருந்தாள்.

திடீரென ஏதோ நினைத்தவளாக அதை எடுத்து மடித்து தூர எறிகிருள். பின் மேசை மீது முகத்தைத் தொங்கப் போட்டு ஏதோ சிந்தனையில் தன்னை மறந்து...ஏங்குகிருள்.

வந்த உருவம் சுகுணுவின் இச்செயல்களைக் கண்டு அசந்துபோய் முன்வைத்த காலைப் பின்வைக்காமல் அப்படியே நிற்கிறது. அவ்வுருவம் ஏதும் நினைத்துக்கொண்டதோ என்னவோ...மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்து சுகுணுவின் தோள்களைப் பற்றி ‘உசுப்’பியது.

நிமிர்ந்த சுகுணு, தன் உயிர்த்தோழி ராதா நிற்பதைக் கண்டு, தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டு “ராதா! அசுப்பில்லாமல் எப்படி வந்தாய்...? நிற்கிருயே...இப்படி இரு” என்று இருக்கையை எடுத்துப் போடுகிருள். ‘அதிருக்கட்டும் சுகுணு நீயேன் ஒருமாதிரியாக இருக்கிருய்...? ‘மிஸ்டரோ’டு ஏதும்... சண்டையோ...! என மெதுவாக கேட்கிருள் ராதா.

சுகுணு மிகுந்த கவலையோடு, “அப்படியொன்றுமில்லை. என் மனக்கோட்டை இடிந்துவிட்டதடி... நான் அன்புகொண்டு பாசம் கொண்டு அருமையாக நேசித்த...” என்று சுகுணு முடிக்கவில்லை.

‘சுகுணு. நீ என்ன கூறுகிருய்...எனக்கு ஒன்றும் புரியல்லையே.’ என ராதா இடிந்து போய்க் கேட்டாள்.

“ராதா என்னைத் தொந்தரவுசெய்யாதே! ஒருவருடமாக உயிர்போல் நேசித்த என் அன்புச் செல்வமான என் உஷாக்குட்டியை அநியாயப் பாழாய்ப் போன “வீமன்” கொன்றுவிட்டானே! விபத்தாம்...விபத்து...” என்று சுகுணு கூறிவிட்டு அழத் தொடங்கினுள்.

ராதாவுக்கு ஒன்றும் புரியவில்லை. ‘என்னடா இவள் ஏதேதோ பிதற்றுகிருள் பிள்ளையில்லையே என்று ஏங்கியிருந்த தோழிக்கு...அந்த ஏக்கத்தால் புத்தி மாருட்டம் ஆகிவிட்டதோ...” என வருந்திய ராதா, “சுகுணு வீணு மனச அலட்டிக்காத... உன் வேதனை எனக்குப் புரியாமலில்ல...” என்று ஏதோ சமாதானம் கூறினுள்.

சுகுணு மௌனமாக எழுந்து சென்று தான் முன்பு மடித்து எறிந்த வாரப் பத்திரிகையை எடுத்து மேசை மீது விரித்து ஒரு படத்தைச் சுட்டிக் காண்பிக்கிருள்.

“பார்த்தாயா ராதா! என் உஷா என்ன அழகாயிருக்கிருளென்று. இந்தக் குழந்தையைப் போய் ஈவு இரக்கமின்றிக் காரினல் மோதவிட்டுச் சாகடித்திருக்கிருரே “வீமன்.”

சுகுணு ஏதேதோ கூறிக் கொண்டிருக்கிருள். ராதாவுக்குத்தான் நினைத்தது தவறு என்பதை உணர்ந்த போது அசடு வழிந்தது. சுகுணுவுக்கு இதெல்லாம்எங்கே புரியப் போகிறது. அவள் தான் அவள்தான் “உஷா” என்னும “வீமன்” எழுதிய தொடர் நாவலோடு ஐக்கியமாகிவிட்டாளே!

— கல்முனைச் செல்வி
[illegible] இராசம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தாஷ்கண்ட் படவிழாவுக்கு

# பணமா பாசமா சென்றதால் எனக்கு எவ்விதபெருமையும் இல்லை

## என்னதான் முடிவு. கண்கண்ட தெய்வம், சென்றிருந்தால் மகிழ்ச்சியடைவேன்!"

### கே. எஸ். ஜி. சொல்கிருர்

தாஷ்கெண்ட்படவிழாவில் என்னுடைய 'என்னதான் முடிவு' 'கண் கண்ட தெய்வம்' ஆகிய படங்கள் திரையிடச் சென்று இருந்தால் நான் பெருமைப்படுவேன், 'பணமா பாசமா' தேர்ந் தெடுக்கப்பட்ள்ளது. அதனுல்நான் பெருமைபப்டவில்லை.

'மக்கள் மனதறிந்து படம் தயாரிக்க வேண்டும் என்று சிலர் கூறுகிருர்கள். மக்கள் மனம் என்றுஒன்றும் இல்லை. தயாரிப்பாளர்கள் மனம் எப்படியோ அப்படித்தான் படங்கள் உருவாகின்றன. மாஸ்மைண்ட் அறிந்துபடம் தயாரிப்பதாகச்சிலர் சொல்வது தவறு.

என்னைப் பொறுத்தவரையிலும் நான் மாஸ் மைண்டுக்காக படம் தயாரிக்க மாட்டேன். நான் சொல்ல விரும்பும் கருத்தை மக்கள்



ஏற்கும் வண்ணம் சொல்வேன், சொல்லி வருகிறேன்.

'எலந்தம்பயம் பாடலால் 'பணமா பாசமா' வெற்றிகரமாக ஓடியதால் அந்தப் பாடல் திரும்பத் திரும்ப காதுகளில் விழுந்து பிரபலமாகி விட்டதே தவிர வேறு ஒன்றுமில்லை.

எனது படம் வெற்றிகரமாக ஓடுவதைக் கண்டசிலர் அதன்மீது குற்றம் கண்டு பிடிக்க வேண்டுமேஎன்பதற்காக'எலந்தம்பயம்' பாடலை எடுத்துக் கூறுகிருர்கள். வேறு சிலர் 'எலந்தம்பயம்' பாடலால்தான் 'பணமா பாசமா?' வெற்றி பெற்று விட்டது என்று நினைத்து தங்கள் தங்கள் படங்களில் 'கொய்யாப்பழம்' 'மாம் பழம்' 'பேரீச்சம் பழம்' என்று பாடல்களை அமைக்கத் தொடங்கி விட்டனர்''

# கணவனிடம் பத்மினி கெஞ்சினுர்!

என்னை கைவிட்டு விடாதீர்கள் என்று கணவனிடம் கெஞ்சினுர் பத்மினி!

கல்யாணத்திற்குப் பின் கணவனுடன் மகிழ்ச்சியோடு பத்மினி குடும்பம் நடத்தினுர்! ஒரு குழந்தையும பிறந்தது! குழந்தை பெற்ற பின் பத்மினி உடல் நலம் இல்லாமல் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ருர்! ஒரு மாதம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ற பின் அவர் வீடு திரும்பினுர்!

பத்மினிக்கு பக்கத்தில் இருந்து கொண்டே 'ஆர்லிக்ஸ்' கலக்கிக் கொடுப்பதும், பழரசம் பிழிந்து கொடுப்பதுமாகக் கணவன் பணிவிடை செய்து வந்தார்! தன் பக்கத்திலேயேகணவன் இருக்க வேண்டும் என்று பத்மினி விரும்பினுர்!

மனைவியின் அருகிலேயே எப்பொழுதும் இருந்தால் தொழில் என்ன ஆவது? என்று கருதி, அவ்வப்போது தொழில் விஷயங்களையும் கவனித்து வந்தார்.

அதனுல் கணவன் மீது பத்மினிக்குச் சந்தேகம் உண்டானது! கணவன் எங்கே அடுத்த பெண்ணுடன் வாழ்க்கை நடத்தத் தொடங்கி விடுவாரோ என்று பத்மினி பயந்தார்! அந்தப் பயத்தை கணவனிடம் ஒரு நாள் சொல்லவும் தொடங்கினுர்.

''உங்க மாதிரிப் பொறுமையான நல்ல கணவன் உலகத்திலேயே இருக்க முடியாது! எவ்வளவோ பாவத்திற்கு நடுவிலே நான் கொஞ்சம் புண்ணியம் செய்திருக்கிறேன்! அதனுல் தான் உங்களை நான் கணவனுக அடைந்திருக்கிறேன்! ஒரு நாளும் என்னைக் கைவிட மாட்டீாகளே'' என்று கணவனிடம் பத்மினி கெஞ்சினுர்!

''உன்னை எல்லாவற்றிற்கும் மேலாக நேசிக்கிறேன்! விரும்புகிறேன் என்று எத்தனை தடவை சொல்வது'' என்று கணவன் சொன்னுர்!

''பெண் மனம் உங்களுக்குப் புரியவில்லை! எவ்வளவு முறை ஒரு பெண்ணிடம் கணவன் அவளை விரும்புகிறேன் என்று சொன்னுலும் அது அவளுக்கு அலுக்காது! அதுதானே பெண்ணுக்குத் தெய்வீக சங்கீதம்'' என்று பத்மினி கூறிருர்!

இக்காட்சி ராஜலட்சுமி பிக்சர்சின் ''மின்னல் மழை மோகினி'' படத்திற்காக சாரதா ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டது! பத்மினியின் கணவனுக ஜெமினி கணேசன் நடித்தார்! ஜாவர் சீதாராமன் டைரக்டு செய்தார்!



## 3 வேடங்களில் சிவாஜி நடிக்கும் படம்!

சாந்தி பிலிம்சார் தயாரிக்கும் சமூகப்படத்தில் தந்தையாகவும் 2 மகன்களாகவும் சிவாஜிகணேசன் நடிக்கிருர்! தந்தையாக வரும் சிவாஜிக்கு மனைவியாக பண்டரிபாய் நடிக்கிருர்!

சுந்தரராஜன், சிறுவன் ராஜ்குமாரி ஆகியோரும் நடிக்கிருர்கள்! திருலோகச் சந்தர் டைரக்ஷனில் இதன் படப்பிடிப்பு நடக்கிறது!

## எம் ஜி. ஆருக்கு வாய்ப்பு!

### 7 கலர் படங்களில் நடிக்கிருர்!!

எம். ஜி. ராமச்சந்திரன் நடித்து வரும் 'அடிமைப் பெண்' கலர்ப்படம் அடுத்த மாதம் வெளிவருகிறது!

அடிமைப் பெண், கேசி பிலிம்சின்குமரிக் கோட்டம், மேகலா பிக்சர்சின் எங்கள் தங்கம், வீனசின் என் அண்ணன், வள்ளி பிலிம்சின் நம்ம வாத்தியார், பத்மினி பிக்சர்சின் படம், சத்யா மூவீஸ் படம் ஆகியவற்றிலும் [illegible] எம். ஜி. ஆர். நடித்து வருகிருர்!

# திரைவாணன் பதில்கள்

சொல்லின் செல்வன்,
கொட்டடி.

கே: சிவாஜியின் தில்லானு மோகனும்பாள் படம் சென்னையில் எத்தனை நாட்களாக ஓடிக்கொண்டிருக்கிறது?

ப: 3-11-68 அன்று நூறு நாளைக் கடந்து வெள்ளி விழாவை நோக்கி வெற்றி நடை போடுகிறது!

ஃ

ஏ. ஸீ. எம். சுலைமான்,
கொழும்பு-10.

கே: சிவாஜி கணேசன் நடித்த தில்லானுமோகனும்பாள் வெள்ளி விழா கொண்டாடுமா?

ப: கண்டிப்பாகக் கொண்டாடும்!

ஃ

பி: சின்னத்தம்பி,
கைதடி.

கே: எம்.ஜி.ஆர்,முதல்நடித்த பெயர் என்ன?

ப: சதிலீலாவதி!

ஃ

கே. ஐ. கணபதி,
உடப்பூர்.

கே: புரட்சிநடிகர் எம்.ஜீ. ஆர். நடித்த 100-வது படமான ஒளிவிளக்கு வெற்றிப் படமா?

ப: ஆம்!

ஃ

இ. ஸ்ரீகந்தராசா,
உடப்பூர்.

கே: தற்கால சினிமா இசையமைப்பாளர்களில் கர்நாடக இசைக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பவர் கே, வி. மகாதேவன் என்கிறேன் நான். இல்லை விஸ்வநாதன்தான் என்று கூறுகிறுன் என் நண்பன். இதில் யார் கூறுவது சரி?

ப: உங்களுக்கே வெற்றி!

ஃ

இ. சிவசந்திரன்,
கோண்டாவில் கிழக்கு.

கே: இரு மலர்களில் சிவாஜி, அசோகனை அடித்ததும், ஏன் அசோகன் திருப்பி அடிக்கவில்லை?

ப: டைரக்டர் அவரிடம் அப்படிக் கூருததால்!

ஃ

க. கமலநாதன்,
மட்டக்களப்பு.

கே: சிவாஜி கூறினுர் கத்தி தூக்கி சண்டை பிடிப்பது ஒரு நடிப்பா என்று. ஏன் அவரே இப்போது சிலபடங்களில் கத்திபிடித்து சண்டைக் காட்சிகளில் நடிக்கிருர்?

ப: இரசிகர்கள் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக!

ஃ

ஸ்ரீதரன்,
கோண்டாவில்.

கே: தாங்கள் அண்மையில் சென்னை சென்றபோது சிவாஜியை பார்த்தீர்களா? அவர் இலங்கை ரசிகர்கள் பற்றி என்ன சொன்னுர்? அவர் மெலிந்துவிட்டாரா?

ப: நன்ருக மெலிந்து அழகாக இருக்கிருர். இலங்கை ரசிகர்களைப் பற்றி மிக உயர்வாகப் பேசினுர்.

ஃ

மா. குலேந்திரன்.
இரத்மலானை,

கே: மக்கள் திலகமும் முத்துராமனும் எந்தப் படங்களிலாவது ஒன்ருக நடிக்கின்ருர்களா?

ப: ஆம். வீனஸ் பிக்சர்ஸ் படத்தில்!

ஃ

செல்வி லீலா நாராயணன்,
கொழும்பு.

கே: ஒரு படத்தில் நடிக்க ''தென்னக ஜேம்ஸ் பொண்ட்'' ஜெய்சங்கர், ரவிச் சந்திரன் ஆகிய இருவரிலும் அதிக தொகை வாங்கும் நடிகர் யார்?

ப: ஏறத்தாழ இருவரும் ஒரே அளவு தொகையே வாங்குகிருர்கள்!

ஃ

எம். நடராஜ்,
அட்டன்.

கே: ஜெயசங்கர் முகவரியென்ன?

ப: ஜெயசங்கர், காலேஜ் ரோட், சென்னை.

ஃ

ஜெகநாதன்,
சத்துருக்கொண்டான்,
மட்டக்களப்பு.

கே: கே. எஸ். ஜி. எப்போது ரஷ்யா செல்வார்?

ப: சென்று திரும்பிவிட்டார்!

ஃ

க: முருகையா,
வண்ணுர்பண்ணை.

கே: ஆயிரத்தில் ஒருவன் படத்தில் எம்.ஜி.யாரின் முதுகில் மரம் விழுகிறது. மரமா அல்லது காட்போடா?

ப: காட்போட்டால் ஆன மரம்!

ஃ

அ. அன்ரன் யேசுதாசன்,
மிருசுவில்.

கே: எந்த நடிகை அதிக படங்களில் நடித்துள்ளார்?

ப: நடிகை பத்மினி!

ஃ

தாளையூர் முருகுப்பிள்ளை,
தாழங்குடா.

கே: அழகு நடிகர் சிவகுமார் மீது எந்த நடிகையாவது ஆசைப்படுவதுண்டா?

ப: ''காயகல்பம்'' சாப்பிடும் சில நடிகைகள் சிவகுமாரைத் தம் வலைக்குள் வீழ்த்த முயன்றனராம்! ஆனுல் சிவகுமார் அகப்படவில்லையாம்!

ஃ

கே. கே. எஸ். ராசேந்திரம்,
தருமபுரம்.

கே: எம்,ஜி.ஆரை ஏன் எம். ஆர். ராதா சுட்டார்?

ப: பொருமைதான்! வேறென்ன?

ஃ

சிவனேசராசா,
பருத்தித்துறை.

கே: எம். ஜி. ஆர். திரையுலகை விட்டு விலகப் போகிருராம் உண்மையா?

ப: ஏதாவது பகற்கனு கண்டீரா? 25-க்கு மேற்பட்ட படங்களில் தற்போது ஒப்பந்தமாகியுள்ளார் எம். ஜி. ஆர்.

ஃ

யேசுதாசன்,
உடுப்பிட்டி.

கே: சென்னையில் படகோட்டியும், தேர்த்திருவிழாவும் எத்தனை நாட்கள் ஓடின?

ப: 100 நாட்கள் ஓடவில்லை.

திரைவாணன்
சுதந்திரன்
கலைப் பூஞ்சோலை
த. பெ. இல. 11 83.
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2வது ஜனத்திரள் வாரம்!!

சென்ட்ரல் (மருதானை) நவா (கொம்பனித்தெரு) ராணி (யாழ்ப்பாணம்)

ராஜேஸ்வரி (மட்டுநகர்) ஜோதி (திருமலை) லிபர்ட்டி (அட்டன்) றெக்ஸ் (பதுளை) ஆனந்தா (கம்பளை)

● எம். ஜி. ஆர். ● ஜெயலலிதா
(5 வேடங்களில்)

நாகேஷ், அசோகன், மனோரமா, முத்துராமன், விஜயகுமாரி

—மற்றும் பலர் நடித்த—

தேவர் பிலிம்ஸ்

# தேர்த்திருவிழா

கதை தயாரிப்பு சின்னப்பாதேவர் | டைரக்ஷன் எம். ஏ. திருமுகம் | இசை கே. வி. மகாதேவன்



சுஜாத்தாவின்

# என் தம்பி

இசை: எம். எஸ். விஸ்வநாதன் | டைரக்ஷன்: ஏ. சி. திருலோகசந்தர் M. A.

## எமது அடுத்த வெளியீடு!!

★ நடிகர் திலகம் சிவாஜி, ★ அபிநயசரஸ்வதி சரோஜாதேவி
★ ஹாஸ்ய மன்னன் நாகேஷ் —மற்றும் பலர் நடித்த

# 5-வது வெற்றி வாரம்

செல்லமகால் (கொழும்பு) நெல்சன் (திருமலை) றிகல் (கண்டி) றிகல் (நாவலை) வின்சர் (யாழ்நகர்) மற்றும் திரைகளில்

* சிவாஜி, * பத்மினி, * கே. ஆர். விஜயா, * நாகேஷ்

—நடிக்கும்—



# இரு மலர்கள்



## விரைவில் எதிர்பாருங்கள்

தமிழில் பிரமாண்டமான ஜேம்ஸ்பொண்ட் படம்

எம். ஜி. ஆர்., ஜெயலலிதா, நாகேஷ், நம்பியார், அசோகன், நிர்மலா, புஷ்பமாலா, பசுவதி

—நடிக்கும்—

# ரகசிய பொலீஸ் 115 ஈஸ்மன் கலர்

# இப்பொழுது காட்சி தருகிறது

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) மைலன் (கொழும்பு) ராஜ் (நீர்கொழும்பு) வெலிங்டன் (யாழ்நகர்) விஜயா (மட்டுநகர்) மொடேன் (பண்டாரவளை) நியூ சினிமா (குருநாக்கல்)




ரவிச்சந்திரன், எஸ். விஜயலட்சுமி, மணிமாலா, மனோகர் நடிக்கும்

மொடேன் தியேட்டர்ஸ்

# எதிரிகள் ஜாக்கிரதை




2வது மாதம் கிங்ஸ்லி (கொழும்பு) எம். ஜி. ஆர். சரோஜாதேவி

# பறக்கும் பாவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர் லிமிட்[illegible] கொழும்பு பண்டாரநாயக்க வீதி 194 ஏ. இலக்கத்தில் 1968-வருடம் நவம்பர்மாதம் 19-ம் திகதி செவ்வாய்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது. தொலைபேசி: 23411